REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணு 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் [illegible] | 2-5-48 | இதழ் 47

## நேர் விரோதம்

—★—

"சமீபகாலத்தில் ஒரே ஆளே நாடெங்கும் பல பத்திரிகைகளை நடத்துவதென்பதும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. இவ்விதம் ஒருவரே பல பத்திரிகைகளை நடத்துவது என்பதையே நான் வெறுக்கிறேன். ஏனெனில், சுயேச்சையான, விஷயஞானத்தோடு கூடிய அபிப்பிராயத்தைப் பத்திரிகைகள் தெரிவிக்கவேண்டுமென்பதற்கு இது நேர்விரோதமானது. பத்திரிகைகள் இப்படித் தனிப்பட்ட, சிலரின் ஆதிக்கத்திற்குட்பட்ட கோஷ்டிகளாகி விடுவதானால், சிலருடைய நன்மைக்காக அவை இப்படி நடப்பவைகளாவதுடன், அதை இலாபத்திற்கான தொழில் போலவே செய்துவிடுவதும் ஆகும்."

பண்டித நேரு

(26—4—48)

## யாழ்வல்ல பாணர்

16-ம் பக்கத் தொடர்ச்சி

முடைய குடும்பத்தோடு கருவூர் சென்று அங்கு சிலநாட்கள் தங்கியிருந்தார். அப்போது கருவூரிலுள்ள சிலர், அவரைப் பார்ப்பதற்காக அவர் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றனர். அந்தச் சமயத்தில் கதிரைவேற் பிள்ளை உள்ளே படுத்திருந்தார். கூடத்தில் அவருடைய மனைவியும் ஐந்து வயதுப் புதல்வனும் இருந்தனர். வந்தவர்களை யார் என்று அறிந்துவரும்படி தாய், குழந்தையை அனுப்பினுள். குழந்தை வெளியே வந்து, அங்கு வந்திருந்தவர்களைநோக்கி, "அம்மை நம்மை யாவரென வினவுகின்ருள்" என்று கேட்டது. இதனைக் கேட்டதும், "இந்தச் சிறுவனே இப்படிப பேசுகின்ருன் என்ருல் இவனுடைய தந்தையும் புலவருமான கதிரைவேற் பிள்ளை எப்படிப் பேசுவாரோ! அவர் பேசுவதை எம்மால் புரிந்துகொள்ளக்கூட முடியாதே" என்று எண்ணிப் போய் விட்டார்களாம். இதுபோலவே தான், ஏமநாதன் என்ற யாழ்ப்புலவனும், பாணபத்திரரின் மாணுக்கர்களுடைய யாழ்ப் புலமையைக் கண்டதும், பாணபத்திரரின் மாணுக்கர்களே இப்படி யாழ் வாசிக்கிருர்கள் என்ருல், இவர்களுடைய ஆசிரியரான பாணபத்திரர் எப்படி யாழ் வாசிப்பாரோ என்று அஞ்சிப், பாதி இரவிலேயே ஊரை விட்டு ஓடிப்போயிருக்க வேண்டும். இதுவே உண்மையாக நடந்திருக்கக்கூடிய நிகழ்ச்சியுமாகும். புராணத்தில் பேசப்படும் நிகழ்ச்சி உண்மையாக நடந்திருக்குமானுல், அந்நிகழ்ச்சிக்கு நாம்மேலே குறிப்பிட்ட உண்மையைத் தவிர வேறுவிதமாக எதுவும்இருக்கமுடியாது. சிவன், விறகு வெட்டியாக வேடந் தாங்கி வந்ததாகக் கூறப்பட்டது, புராண அன்பர்கள், தங்களால் கட்டிப் புனைந்து கூறப்படும் கடவுள் தன்மையை மக்கள் மனதில் பதியவைப்பதற்காக வழக்கமாகக் கையாளும் முறையேயாம். இந்த முறைகள், மக்களிடையே கடவுள் நம்பிக்கையை உண்டாக்குமா அல்லது கடவுள் நம்பிக்கையை இழக்கச் செய்யுமா என்பதனை அக்காலப் புராண அன்பர்கள் அறிந்துகொள்ளும் பக்குவத்தை அடையாதவர்களாய் இருந்ததால்தான், அங்கிங்கென்னுத கடவுளை அங்கிங்கென்னுத கதைகளாலேயே கற்பனை செய்து எழுதி வைத்துவிட்டனர்.

இல்லையேல், ஒரு யாழ் வல்ல புலவன், தன்னினும் பார்க்கத் திறமையாக யாழ் வாசிக்கக்கூடிய ஒரு புலவன் விறகு வெட்டி அதனை விற்றுத்தான் தன் வாழ்க்கையை நடத்த வேண்டுமா என்பதனைக்கூட எண்ணிப் பாராமல், இந்த விறகு தலையனே இந்தப் போடுபோட்டால், இவனுடைய ஆசிரியன் எந்தப் போடு போடுவனே என்று அஞ்சி ஓடிப்போய்விட்டான் என்று கதை எழுதுவார்களா? கருவூரில், புலவரைக் காணச் சென்றவர்களாவது, தங்களிடம் புலமை இல்லை என்பதை அறிந்து அவ்விடம் விட்டுப் போய் விட்டார்கள். ஆனுல் இங்கு பேசப்படும் ஏமநாதன் என்பவன் புலமையற்றவன் அல்லவே! யாழ் வாசிப்பதில் புலமை தன்னிடம் இருந்ததாலேயே வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தான். வந்தவன் விறகு தலையனின் யாழ்ப் புலமையைக் கண்டதும் மிரண்டு ஓடிவிட்டான் என்பதை எவராவது நம்ப முடியுமா? ஒருவேளை யாழ் வாசித்த விறகு தலையன் உண்மையான புலவனும் இருந்தான் என்றே வைத்துக் கொள்வோம். இதற்காகவே வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதன் அந்த விறகு தலையன் யாழ் வாசித்ததைக் கேட்டுச் சும்மாவா இருந்திருப்பான். "நான், பாணபத்திரன் ஒருவன் தான் யாழ் வாசிப்பதில் வல்லுனன் என்று கேள்விப்பட்டு, அவனேடு போட்டியாக யாழ் வாசித்து வெற்றி பெறலாம் என்று எண்ணி வந்தேன்; இங்கு வந்து பார்த்தாலோ சாதாரண விறகு தலையன்கூட என்னைவிடத் திறமையாக யாழ் வாசிக்கின்ருனே! இந்த விறகு தலையன் யார்? இவ்வளவு திறமைபெற்ற ஒருவன், கேவலம் விறகு வெட்டிப் பிழைக்கும் நிலைமைக்கு வரக்காரணம் என்ன? ஒருவேளை இவன்தான் பாணபத்திரனுய் இருக்கலாமோ? என்பன போன்ற ஐயப்பாடுகள் ஏமநாதனுக்கு உண்டாகாமல் இருக்குமென்று எவராவது கருத முடியுமா? அவனுக்குண்டான ஐயப்பாடுகளை அக்கம்பக்கத்தில் விசாரித்து உண்மையை அறிய முயற்சித்திருக்க மாட்டானு? இங்கிருந்து கல்கத்தாவுக்குச் சென்ற ஒருவன், புகைவண்டியை விட்டு இறங்கியதும், தான் போகவேண்டிய இடம் புகைவண்டி நிலையத்திலிருந்து அரைக்கல் தொலைவில் இருக்கிறது; எனவே இவ்வளவு தொலைவை எப்படி நடந்து செல்வது என்று கருதிப் பழையபடியும் புகைவண்டி ஏறி இங்கு திரும்பி வந்து விட்டான் என்று யாராவது கூறினுல், எவராவது நம்புவார்களா? இதுபோலவேதான், பாணபத்திரரோடு யாழ்வாசித்து, வென்று பரிசு பெற்றுப் போவதற்காக வந்த ஏமநாதன், விறகு தலையனின் யாழ்வாசிப்புத் திறமையைக் கண்டதும் அஞ்சி, இரவோடு இரவாக மறைந்து ஓடிப்போய் விட்டான் என்பதையும் எவருமே நம்ப மாட்டார்கள்.

இனி, இந்நிகழ்ச்சி, ஒருவேளை தமிழ்நாட்டு இசைப் புலவர்களின் திறமையை எடுத்துக்காட்டவே, வடநாட்டான் ஒருவன் இங்கு யாழ் வாசிப்பதற்காக வந்தான் என்றும், வந்தவன், இங்குள்ள ஒரு விறகு தலையன் யாழ்வாசிப்பதில் தன்னைவிடத் திறமைபெற்றிருந்தலைக் கண்டதுமே அஞ்சி ஓடிப்போய் விட்டான் என்று கூறப்பட்டதேயன்றி, உண்மையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற வில்லை என்று கூறுவதாயினும், அதனை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. வடநாடு ஏதாவது ஒரு துறையில் சிறந்திருந்தால் அதனைப் புகழ்வதும், அதுபோலவே தென்னுடு ஏதாவது ஒரு துறையில் குறைபாடுடையதாக இருந்தால் அதனை ஒப்புக்கொள்வதுமே நம்முடைய பண்பு. அதுவே உண்மைத் தமிழர் மரபுங்கூட. எனவேதான், விறகுதலையனுடைய யாழ் வல்லமையைக் கண்டதும் ஏமநாதன் அஞ்சி ஓடிப்போய்விட்டான் என்பதை எவரும் நம்பமாட்டார்கள் என்று கூறுகின்றேம். பாணரின் மற்ற விபரங்கள் அடுத்த கட்டுரையில்.


எதிர் பாருங்கள்

சென்னையில் மீண்டும்

Y. M. D. A. யின்

**'விதியின் சூழலா?'**

நாடகம்.

சி. என். அண்ணுத்துரை

தலைமை வகிப்பார்.

# யாழ்வல்லபாணரை இழிவுபடுத்துவதா?

பாணபத்திரர், ஒரு சிறந்த புலவர்—இசைவாணர்—யாழ் வாசிப்பதில் அவருக்கு இணையாரும் கிடையாது. மதுரைச் சொக்கநாதரை இசையால் வழிபட்டுத் தொண்டு செய்து வந்தார். அதோடு, வரகுண பாண்டியன் என்ற மதுரை மன்னன் சபையிலும் இவர் ஒரு புலவராய் வீற்றிருந்து, தம்முடைய யாழ் வல்லமையால் சிறப்புற்றிருந்தார். அந்தச் சமயத்தில், யாழ் வாசிப்பதில் வல்லவனான ஏமநாதன் என்ற வடநாட்டான் ஒருவன் தன்னுடைய திறமையைக் காட்டி வரகுணபாண்டியனிடம் பரிசு பெறுவதற்காக மதுரைக்கு வந்திருந்தான். அது கண்ட மன்னன், பாணபத்திரரை அழைத்து, 'ஏமநாதனுடன் பாட வல்லீரோ' என்று கேட்க, அவர், 'நான் சொக்கர் அருளால் பாட வல்லேன்' என்று கூறி, அதனைச் சொக்கநாதரிடம் முறையிடச், சொக்கநாதர், ஓர் விறகுவிற்பவராய் வேடந் தாங்கி, ஏமநாதன் தங்கியிருந்த வீட்டுப் பக்கத்தில் போய் நின்றுகொண்டு யாழ் வாசிக்க, அதனைக் கேட்ட ஏமநாதன் வெளியே வந்து, 'நீர் யார்?'' என்று கேட்க, அதற்கு அவர், "நான் பாணபத்திரரின் மாணாக்கருள் ஒருவன்; நான் கிழவனாய் இருப்பதால் என்னை அவர் நீக்கிவிட்டார்; இப்போது விறகுவெட்டி வாழ்க்கையை நடத்துகிறேன்" என்று கூற, அது கேட்ட ஏமநாதன், "இந்த விறகுதலையன் பாட்டே இப்படி இருக்குமாயின், இவனுடைய ஆசிரியனான பாணபத்திரன் பாட்டு எப்படி இருக்குமோ" என்று அஞ்சிப் பாதி இரவிலேயே ஊரை விட்டு ஓடிப் போய்விட, அதன் பின்னர் சொக்கநாதர், பாணபத்திரரிடம் நிகழ்ந்ததைக் கூற, அவர் அதனைப் பாண்டியனுக்குக் கூற, அது கேட்ட பாண்டியன், "சொக்கநாதரைப் பாடுக" என்று பாணபத்திரரைக் கேட்கப், பாணபத்திரர், பாண்டியனுடைய சபைக்குச் செல்வதை விட்டுச், சொக்கநாதர் கோயிலில் இருந்துகொண்டே இசைத் தொண்டு செய்துவர, இதனால் பாண்டியனுடைய உதவி பாணபத்திரருக்குக் கிடைக்காது போக, இதறிந்த சொக்கநாதர் பாண்டியனுடைய பண்டார (பொக்கிஷ)த்தில் இருந்து பணத்தை எடுத்துப் பாணருக்குக் கொடுத்துவர, அதுவும் சிலநாள் நடைபெற்று நின்றுவிடவே, பாணபத்திரர் வறுமையால் வாடும்படி நேரிட, அதனை அறிந்த சொக்கநாதர், இனியும் பாண்டியனுடைய பண்டாரத்திலிருந்து பணத்தை எடுத்தால், பண்டாரத்துக்குக் காவலாய் இருப்பவர்களை மன்னன் தண்டிப்பான் என்று கருதி, ஒரு கடிதம் சேரனுக்கு எழுதி, அதனைப் பாணபத்திரரிடம் கொடுக்க, அதனை அவர் எடுத்துக்கொண்டு போய்ச் சேரமன்னனிடம் சேர்ப்பிக்கச், சேரமன்னன், தன்னுடைய பண்டாரத்தைத் திறந்து அதிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்து மூட்டை கட்டி அவற்றை யானை, குதிரை, ஒட்டகம் ஆகியவற்றில் ஏற்றி, ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டதோடு, தம்முடைய சேனை அரசு ஆகிய அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ள, அதற்குப் பாணர், "யாம் விரும்புவதை மட்டும் பெற்றுக் கொள்வேன்; இதுவே சிவபெருமான் ஆணையும்" என்று கூற, சேர மன்னன் சிவனாரின் ஆணையை மீற அஞ்சிப், பாணபத்திரர் சொல்வழி நிற்கப், பாணர் சேரனிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டார் என்ற ஒரு நிகழ்ச்சியும் பெரிய புராணத்தில் பேசப்படும் பெருமாக்கோதையார் என்ற சேரமன்னன் கதையில் காணப்படுகின்றது.

எனவே, இங்கு பேசப்படும் பாணபத்திரர் என்பவர் யாழ் வாசிப்பதில் மிகவும் திறமை பெற்றிருந்தார் என்று சொல்லப்படுகிறது. இவருடைய திறமையைக் குறித்து,

"பண்பால் யாழ்வல்ல பாணபத்திரன்" என்று சிவனே வியந்து கூறியதாகவும் சொல்லப்படுகின்றது. இப்படியிருந்தும், இவருடைய திறமை, வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதன் என்பவனுடைய திறமைக்கு ஈடாகாதென்று சிவன் கருதியதாகவும், அதனாலேயே சிவனே ஒரு விறகு வெட்டியாக வேடந் தாங்கி வந்து யாழ்வாசித்து ஏமநாதனைத் துரத்தியடித்ததாகவும் சொல்லப்படுகின்றது. பாணபத்திரருக்குப் பதிலாகச், சிவன் ஒரு விறகு தலையனாக வந்து யாழ் வாசித்து ஏமநாதனை ஊரைவிட்டு ஓடும்படி செய்ததாகச் சொல்லப்படும் நிகழ்ச்சி ஒரு புதுமையாகவே இருக்கிறது. சிவன் இந்த முறையை ஏன் கையாண்டார் என்பது தெரியவில்லை. பாணபத்திரரோடு போட்டி போட்டு, யாழ்வாசித்து, அதில்தானே வெற்றிபெற வேண்டுமென்ற எண்ணத்தோடு வந்த ஏமநாதனிடம் பாணபத்திரரையே அனுப்பிவெற்றி தோல்வி காணவிடாமல், அந்தப் பணியினைச் சிவன் தம் தலைமீது போட்டுக்கொண்டு, தாமே ஒரு விறகு தலையனாக வந்து யாழ் வாசித்த காரணம் என்ன? ஒருவேளை, தமிழ் நாட்டில் விறகு வெட்டி விற்றுப் பிழைக்கும் சாதாரண மனிதன்கூட யாழ் வாசிப்பதில் திறமை பெற்றிருக்கிறான் என்பதை வடநாட்டில் இருந்துவந்த ஏமநாதனுக்குக் காட்டி, அவனைப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்வதற்காகச் சிவன் அவ்வாறு செய்திருக்கக்கூடும் என்றும் சிலர் கருதக்கூடும். அதில் உண்மை இருப்பதாகவும் சிலர் கருதிக் களிப்பர். ஆனால் எங்கே இருக்கிறது அதில் உண்மை? வந்தவர் சாதாரண விறகு வெட்டிப் பிழைக்கும் மனிதனல்லவே! சர்வ வல்லமை பொருந்தியவராகப் பேசப்படும் சாட்சாத் சிவனன்றோ விறகு தலையனாகவந்து யாழ் வாசித்ததாகச் சொல்லப்படுகின்றது. இப்படிச் சொன்ன பிறகு, யாழ் வாசிக்கும் திறமையும் பெருமையும் நம் போலும் சாதாரண மனிதனுக்கு அதிலும் விறகு விற்றுப் பிழைக்கும் மிக மிகச் சாதாரண மனிதனுக்கும் உண்டு என்பதை வடநாட்டு ஏமநாதனுக்குக் காட்டினார் எங்கள் சிவன் என்று கருதி எப்படிக் களிப்புக் கொள்வது? கிடைத்த பெருமை சிவனுக்கா? சாதாரண மனிதனுக்கா? சாதாரண மனிதனுக்குத்தான் என்றால், சிவனே ஒரு விறகு தலையனாக வந்து யாழ் வாசித்தார் என்று ஏன் கதை அளக்கவேண்டும், அப்படிக் கதை அளந்த பின்னர், வடநாட்டிலிருந்து வந்த ஏமநாதன்,

தென்னாட்டிலுள்ள விறகு வெட்டி கூட யாழ் வாசிப்பதில் என்னைவிடத் திறமை பெற்றவனாக இருக்கிறானே! இப்படியிருக்க யாழ்வல்ல பாணபத்திரரின் திறமை எப்படியிருக்குமோ என்று அஞ்சிப் பாதி இராத்திரியிலேயே ஊரைவிட்டோடிப்போய் விட்டான் என்பதாக, "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்ற முறையில் மேலும் கதை அளப்பதை அறிவுடைய உலகம் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்!

விறகு தலையன் வடிவத்தில் வந்து யாழ் வாசித்து ஏமநாதனை தோற்கடித்த பெருமையைத் தமிழ் நாட்டுக்கு உண்டாக்க முயல்வது, உண்மையிலேயே தமிழ் நாட்டுக்குரிய பெருமையைக் குறைத்தும்—இழித்தும் காட்டும் ஒரு கீழ்த்தரமான செயலாகும். எப்படியென்றால், பாணபத்திரர் என்பவர் பாண்டிய மன்னன் சபையில் ஒரு யாழ்வல்ல புலவராய் இருந்தார். இதனைக் கேள்விப்பட்ட வடநாட்டு ஏமநாதன் என்பவன், பாணபத்திரரோடு யாழ் வாசித்து அதில் வெற்றி பெறவேண்டுமென்று கருதி வந்தான் என்று கூறிவிட்டு, உடனே, சிவன் ஒரு விறகு தலையனாக வந்து யாழ் வாசித்தார் என்று கூறுவது, உண்மையிலேயே பாணபத்திரரையும் அவர் வாழும் தமிழ் நாட்டையும் கேவலப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒரு காரியமென்றே கருத வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, யாழ்வாசிக்கும் திறமை தமிழ நாட்டவர்க்குக்கிடையாது; வடநாட்டவர்க்குத்தான் உண்டு; வடநாட்டிலிருந்து யாராவது யாழ்வாசிக்க வேண்டுமென்று வந்தால், அவர்களோடு போட்டி போடும் திறமை சிவனுக்கேயன்றித், தமிழ்நாட்டில் வேறு யாருக்கும்கிடையாதுஎன்பதையுமன்றோ இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. "சிவன் ஒருவர் இல்லையானால் உங்கள் மானமே போயிருக்கும்" என்று தமிழ் மக்களை நோக்கிக் கூறுவது போலவுமன்றோ இந்நிகழ்ச்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. வடநாட்டிலிருந்து ஏமநாதன் என்ற யாழ்வல்லுநர் ஒருவர் வந்தார். அவரை வெல்லத் தமிழ் நாட்டிலிருந்த யாழ் வல்லுனரான பாணபத்திரரால் முடியாது, என்பதை அறிந்த சிவன், உடனே ஒரு விறகு தலையனாக வேடந்தாங்கி வந்து யாழ் வாசித்தார் என்று கூறப்படும் ஒரு நிகழ்ச்சி, உண்மையிலேயே தமிழ்நாட்டின் இசைத் திறமைக்குத், தவிர்க்க முடியாத ஒரு இழுக்கை உண்டாக்குவதாகும். தமிழ் நாட்டில் யாழ் வல்லுநர் எவரும்கிடையாது, தப்பித்தவறி இருந்தாலும், அவர்களால் வடநாட்டவரோடு போட்டியிட்டு வெல்ல முடியாது; தமிழ்நாட்டில் சிவன் ஒருவருக்குத்தான் அந்தத் திறமை உண்டு என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டுவதாகவே இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டுள்ளது.

இல்லையேல், யாழ்வல்ல பாணபத்திரரோடு போட்டியிட்டு வெல்ல வந்த ஏமநாதனின் கொக்கரிப்பை அடக்க, உண்மையிலேயே சிவன் எண்ணியிருந்தால், தாம் அந்த வேலையை ஒரு போதும் மேற்கொண்டிருக்கவே மாட்டார். யாழ்வல்ல பாணபத்திரருக்கு மேலும் யாழ் வல்லமை அதிகப் படும்படி அருள் செய்து, அவரையே அந்த ஏமநாதன் முன் நிறுத்தி, அவன் பலர் அறியத்தோல்வியுற்று ஓடும்படியான நிலைமையை உண்டாக்காமல், சிவன், தாமே ஒரு யாழ்வல்ல புலவராக நடித்துப், பாணபத்திரருக்குக் கிடைக்கவேண்டிய புகழைத் தாம் அடைந்திருப்பாரா? எல்லாம் வல்ல சிவன், யாழ்வல்லமையைப் பாணபத்திரருக்கு அளிக்க வல்லமையற்றிருந்தார் என்று கூறுவது? அப்படிக்கூறுபவர்கள் 'நாத்திகர்' அன்றோ. எல்லாம்வல்ல ஆற்றல் சிவனுக்கு உண்டென்பதை ஒப்புக்கொள்ளும் எவரும், அந்த வல்லமை சிவனிடத்தில் இல்லாதுபோயிற்றென்று கூறுவதை ஒருபோதும் ஒப்புக்கொள்ளவேமாட்டார்கள்.

இனி, யாழ்வாசித்துப் பரிசுபெறுவதற்காக வடநாட்டிலிருந்து ஏமநாதன் என்பவன் வந்திருக்கிறான் என்பதை அறிந்த வரகுணபாண்டியன், பாணபத்திரரை அழைத்து, "ஏமநாதனுடன் பாடவல்லீரோ" என்று கேட்டதாகவும், அதற்குப் பாணபத்திரர், "சொக்கர் அருளால் பாடவல்லேன்" என்று கூறியதாகவும் சொல்லப்படுகின்றதே! அப்படியிருந்தும், சிவன், பாணபத்திரருக்கு அருள்பாலித்து யாழில் வல்லவராகும்படி செய்யவில்லை. அதுமட்டுமல்ல, பாண்டியன் அவ்வாறு கூறியதைக்கேட்டதும் உடனே பாணபத்திரர் மதுரைச் சொக்கநாதரிடம் சென்று தம்முடைய விருப்பத்தை அவருக்குத் தெரிவித்துமிருக்கிறார். அப்பொழுதும் சிவன், தம்முடைய அருட்டிறத்தைப் பாணர்பாற் செலுத்தி, அவரை ஏமநாதனைவெல்லும் யாழ்வல்லவராகும்படி செய்யும் இளகிய உள்ளத்தைப் பெறவில்லை. "நீயோ ஏமநாதனை வென்று புகழ் பெறப்பார்க்கின்றாய்? அது ஒரு போதும் முடியாது; இதோ நானே ஒரு யாழ்வல்லவனாகச் சென்று, அவனை வென்று, அந்தப்புகழை நானே அடைகிறேன் பார்!" என்று கூறும் முறையிலேயே சிவன் நட திருக்கிறார்.

இனிப், பாணபத்திரரோடு யாழ் வாசித்து, அவரைத் தோற்கடித்துப் பரிசு பெறவேண்டுமென்ற எண்ண தோடு வடநாட்டிலிருந்து வந்த ஏம நாதனுக்கு, பாணபத்திரரோடு யாழ் வாசிக்கும் நிலைமையை உண்டா காமல், சிவன், அந்த வேலையை தாமே மேற்கொண்டதன் காரண என்ன என்பதைத் தான் நா ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

வடநாட்டிலிருந்து வந்த புலவ ஒருவன், தமிழ்நாட்டிலிருக்கு ஒரு தமிழ்ப்புலவனால் தோற்கடிக்க பட்டான் என்று கூறப்படுவ தமக்கே கேவலம் என்று சிவன் கரு தியதாலேயே, அந்தப் பணியைத் தாமே மேற்கொண்டு பாணபத்தி ரரை அதில் தலையிடவிடாதபடி முன் னெச்சரிக்கையாக நடந்துகொண் டார். சிவன் ஏன் இப்படி நடக் வேண்டும்? தமிழர்களிடத்தில் சி னுக்கு என்ன பகை என்று சில கேட்கலாம். சிவனுக்கு ஏற்பட் இந்தப் பகைமையுணர்ச்சி இன் நேற்று ஏற்பட்டதல்ல. அவர் எ போது தமிழ்நாட்டுக்கு வந்து கு யேறினாரோ அன்று தொட்டே இ தப்பகைமையுணர்ச்சியும் அவரிட குடிகொண்டுவிட்டது. தமிழர் எ றாலே அவருக்குப் பிடிக்காது. தமி மக்கள் எவராவது அவர் இருக் மிடத்தை அணுகினால் போது உடனே அந்த இடத்தைவிட் போய்விடுவார். தொட்டால் தீட் பட்டுவிட்டதென்றுகதவைத்தாளி டுக்கொள்வார். தமிழ்மக்களிடத்தி மட்டும் பகைமையுணர்ச்சி கொள் வில்லை அவர். தமிழ்மொழியினிட தும் அவருக்குத் தீராப்பகைதான் எவராவது தமிழில் அவரைக்க பிட்டால் திரும்பிக்கூடப் பார்க் மாட்டார். அவரை யாராவது க பிட வேண்டுமானால் சமஸ்கிருத

(16-ம் பக்கம் பார்க்க)

# ★ ஜாதி முறைக்கு சாவுமணி ★

ஜாதி பேதமற்ற சமுதாயத்தைக் காணவேண்டும் என்று இலட்சியம் பேசுவதற்கே, நமது நாட்கள் செலவிடப்பட்டு, அதற்கான வாதப்பிரதிவாதங்களைப்பற்றிப் பேசியும், மேற்கோள்களைக் கொட்டிக்காட்டியும், ஒரே மூலத்தை எடுத்துக்கொண்டு, இருகட்சிகளும், தத்தமது கருத்துக்குத் துணைகிடைக்கத்தக்க பொருள் கூறிக் கொண்டும் காலம் கடத்திவிட்டு, நமது பின் சந்ததிக்கும் இந்த ஜாதிச்சனியனை, தீர்க்கப்படாத வழக்காக, அறுக்கப்படாத சிக்காக, போக்கப்படாத நோயாக, வைத்துவிட்டுப்போவது, ஆண்மையுமல்ல, அறிவுடைமையுமாகாது.

ஜாதிமுறை கொடியதுதான், களையப்படவேண்டியதுதான், இதன் கொடுமையை அறிவாளிகள் நன்கு அறிவர், மக்களும் உணரத் தலைப்பட்டுவிட்டனர்; இனி, படிப்படியாக இந்தக் கொடுமையை ஒழிக்கும் காரியம் நடைபெறும். ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு, இந்தக்காரியத்தைச் செய்யக்கூடாது; ஏனெனில் இது அன்றுதொட்டு, எப்படியோ வேரூன்றிப் போயிருக்கும் விஷ விருட்சம்; மெள்ள மெள்ளத்தான் இந்தக் கொடுமை ஒழியும். ஆகவே, ஜாதி பேதத்தைப்பற்றி, கோபமாகவும் கொதிப்பாகவும் பேசுவதும், அந்த முறையை ஏசுவதும், கூடாது'' என்று இதோபதேசம் கூறப்படுவதுண்டு. இது உப்புச்சப்பற்றது என்பது மட்டுமல்ல, உண்மை நெறியை ஊரார் உணராதபடி தடுக்கும் தந்திரமுமாகும். ஒரு முறை, கொடுமையானது என்பது விளங்கிவிட்டால், அறிவோடு ஆண்மையும் கொண்டவர்கள் செய்ய வேண்டியது, அதனை ஒழிக்கப் பணிபுரிவதேதான். பொருந்தா மணம் புரிவித்துவிட்டுப், பொற்கொடி போன்ற பெண்ணின்வாழ்வுபாழானதும், அவளைத் தேற்ற, விதி—யாரையம்மாவிட்டது என்றுகூறித் தேற்றுவது, மகள் மீதுகொண்ட அன்பின் அறிகுறி மட்டுமல்ல, மறுமண உரிமையை மறுக்கும் தந்திரமாகும்.

உப்பரிகை மீதேறிக்குட்டிக்குபேரன் உலாவ, ஏழை கீழே நெளியும் போது, அவன்மேலே நோக்கி, "அவன் அப்படி வாழ்வானேன்? நான் இங்ஙனம் வதைவது ஏன்? நல்வாழ்வு பெறும் உரிமை எனக்கு இல்லையா! ஏன் அந்த உரிமையைப் பெறுவதற்கு ஆவன செய்யலாகாது?" என்று எண்ணி, ஓர் தீர்மானத்துக்கு வருகிறான்—தன்னைத் தாழ்த்தியும்பிறனைஉயர்த்தியும் வைத்திருக்கும் முறையை எதிர்க்கத்தொடங்குகிறான். "தம்பி! என்னகாரியம் செய்யத் துணிந்தாய்? அவன் பண்டு செய்த புண்ணியத்தின் பலன், இன்று அப்படி வாழ்கிறான். நீ முன்னம் செய்த கர்ம பலனை இப்போது அனுபவிக்கிறாய்" என்று அப்போது யாராவது தத்துவார்த்தம் பேசினால், அது, ஏழையின் புரட்சிச் சக்தியை நசுக்கி, மேட்டுக் குடியின் நிலையைப் பாதுகாக்கும் பணியாகுமே யொழிய, பாரமார்த்திகமாகாது. அதுபோலவேதான், ஏதோ அன்று ஏற்பட்டுவிட்டது; அதன் சூட்சமத்தை நாம் அறியமாட்டோம்; ஒரு காலத்தில் அந்த ஜாதிமுறை நன்மை பயப்பதாகவேகூட இருந்திருக்கக்கூடும், இன்று தேவை இல்லை, ஆனால் திடீரென அந்த முறையைத் தகர்க்க முடியுமா?;' என்று புன்சிரிப்பும் பெருமூச்சும் கலந்த குரலில் பேசுவதும், அறிஞர் முன் தமதுகட்சி சரியானது என்று மெய்ப்பிக்கமுடியாதநிலையில், ஏதோ சாக்குப் போக்குக் கூறி, எவ்வளவு காலம்வரை தள்ள முடியுமோ, அதுவரையில் இலாபந்தானே, ஏன் அந்த இலாபத்தை இழக்கவேண்டும் என்று மழுப்புவதும் தன்னலத் தந்திரமேயொழிய வேறென்ன. தகாததிட்டத்துக்கு, தத்துவார்த்தம் கூறிக் கொண்டிருப்பானேன்! படமெடுத்தாடும் பாம்பைக் கண்டு, இவ்வளவு அழகாகக் காணப்படும் இந்த பாம்புக்கு மட்டும், விஷப்பல் இல்லாதிருக்குமானால், வீட்டுக்கொரு பாம்பன்றோ, விளையாட்டுப் பொருளாக இருக்கும்; நாயும் பூனையும், கிளியும் புறாவும், வளர்த்து வருவதை விரும்புவரோ, பளபளப்பும் வழவழப்பும் கொண்டு, வளைந்து வளைந்து ஆடுவதும், மீட்டிய தம்பூரிலிருந்து கிளம்பும்நாதம்போல் மூச்சு விடுவதும், காணக்காட்சியாக இருப்பதுமாக உள்ள பாம்புகளையன்றோ, வளர்த்துவருவர்! தங்கத்தால் சட்டங்கள் போட்டு, கண்ணாடிப் பேழை ஒன்று தயாரித்து, அதிலே பாம்பை இருக்கவைத்துக் கண்டு இன்புறுவரன்றோ! ஜாதி பேதமும், மனமாச்சரியத்தையும், சச்சரவையும் உண்டாக்கும் காரணத்தால் தானே, ஒழிக்கப்படவேண்டியதாகத் தோன்றுகிறது, என்று பேசுவது, மோசமான ஓர் முறையை—மூலாம் பூசி நீடிக்கச் செய்யும் நயவஞ்சகமாகவே கருதப்படவேண்டும். இந்த நயவஞ்சகம் புரிவோர் நாட்டில் ஏராளமாக உள்ளனர். இந்த நாடு, பொன்னாடுதான், ஆனால், பன்னெடுங்காலமாக, வேடதாரிகளிடம் சிக்கிச் சிதைந்த நாடு, விஷமத்தனமான கோட்பாடுகளுக்கு, வசீகரமான வியாக்யானம் செய்து, வேடதாரிகள், பாட்டாளிகளைப் பட்டியில் மாடுகளாக்கிவிட்ட பாதகபுரி, இந்நாடு. மதமயக்கம் காரணமாக மாட்டு மலத்தையே, மகேசுவரன் என்றெண்ணி வணங்கும் அளவுக்கு அறிவைப் பறிகொடுத்துவிட்ட அப்பாவிகள் அதிகம் பேர் உள்ள நாடு.

பார்ப்பனக் குருவின் பாதத்தைக் கழுவி, அந்த நீரை உட்கொள்வது, பரமபதம் செல்ல அனுமதி பெற்றுத்தரும் பானம் என்று பாமரரை எண்ணச் செய்யும், பாழான பழக்க வழக்கம் நிறைந்துள்ள நாடு. நரி முன் நின்று நாட்டியமாடுவதே, கோழிக்குள்ள கடமை என்பது போல, அடுத்துக்கெடுப்பவனை ஆண்டவனின் அருமந்தப்பிள்ளை என்றும், அடக்கி ஆள்பவனை, மக்களின் ரட்சகன் என்றும் நம்பி, நாசமாகும் மக்கள் ஏராளமாக உள்ள நாடு. இப்படிப்பட்ட நாடு, இன்று உலகிலே பரவியுள்ள அறிவுக் கதிரின் துணை கொண்டேனும், புதுவழி காணுமா என்ற ஆவலோடு, தீவிரவாதிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, அதற்காகப் பணியாற்றும் போது, நயவஞ்சகத்தைக் கொண்டு நல்லறிவாளர்களையும், நம்பி மோசம் போன நம் நாட்டு மக்களையும், ஒரு சேரக் கெடுக்கிறார்கள், மூலாமிடுபவர்கள்.

"வெகு சொகுசுள்ள துரை, இவன் யாரடி?" என்று தோழியைக் கேட்ட துர்நடத்தைக்காரி, அவன், பால் வடியும் வதனமும் நீலக்குறு விழியும் கொண்ட பார்த்திபன் என்பதைத் தோழி மூலம் அறிந்து "சுந்தரரூபா! சுகுணசல்லாபா!" என்று அவனை அழைத்துச்சரசத்தை வீச,

அவன், அவள் காமத்துக்குப் பலியாக மறுத்து, உள்ளத்தை அக்கள்ளியிடம் பறிகொடுக்கக் கூடாது என்று உறுதி கொண்டு, "காமத்தால் கண்ணிழந்த காரிகையை! கடுகிப் போ! இல்லையேல் இக்கட்டாரிக்கு உன்னைத் தயாராக்கிக் கொள்" என்று கூற, அவன் விழியில் உறுதியும் கட்டாரியில் கூர்மையும் பிரகாசிக்கக் கண்டு, மருண்டு, தன் வித்தை வீணானது கண்டு வெகுண்டு, "பெண்ணைப் பழிக்கும் பேயனே! நாகரீக நயம் அறியா நாட்டுப்புறத்தானே! நல்விருந்து நானளிக்க வரும்போது, ஏசுவதோ ஆண் மகனுக்கு அழகு!" என்று தூற்றுகிறாள். அதுபோல, உலகிலே பரவிவரும் அறிவுக் கதிரொளியின் துணைகொண்டு, புதுவழி நாடி நடந்து, இடையே இச்சகம் பேசும் நச்சு நினைப்பினர் வெட்டிடும் படுகுழியிலும் விழ மறுத்த, விவேகபுரி நோக்கிச் செல்லும் வீரர்களை, ஜாதிபேதம் மூட நம்பிக்கை ஆகிய கொடுமைகளைத் தன்னுள் கொண்ட பழைமை, மயக்கமூட்டி, ஆசையை ஊட்டி, "நான் உனக்காகவே, உத்தமர்களால் சிருஷ்டிக்கப்பட்ட உன்னதமல்லவா? பார், என் எழிலை! இளமையைப் பார்! எனக்கு நீ, உனக்கு நான் என்பதுதான் நியதி! என்னைவிட்டுப் பிரியாதே என்று அன்புமொழி பேசி, அடிமை கொள்ளப் பார்த்து, அந்த வீரன் "உன் சாகசம் எனக்குத் தெரியும், நான் உன் வலையில் விழ முடியாது" என்று உறுதியுடன் உரைத்துவிட்டு, நேர்வழி செல்ல, தனக்கு இரையாக மறுப்பவனை, வசைமொழி கூறியாவது, பழைமை, தன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொள்ளத் துணிந்து "பழமையை ஏற்க மறுக்கும் நீ, ஓர் பாபி! பண்டைய முறைகளைக் குறை கூறும் நீ, ஓர் பாதகன்! உன் மூதாதையர் காலமுதற் கொண்டு, உன்னதமானது என்று கருதப்பட்ட வாழ்க்கை முறையைக் கண்டிக்கும் நீ, ஓர் நீசன், நாத்திகன்" என்றெல்லாம் நிந்திக்கிறது. இந்த நிந்தனைக்கு நடுங்குபவரால், நாட்டுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தும் நற்பணிபுரிய முடியாது. சல்லாபத்தால், இளைஞனை பலியாகக்கொள்ளும் சாகசக்காரி, தோல்வி நேரத்தில் சபிக்கத்தான் செய்வாள்—ஆனால், அவளுடைய சல்லாபம, அந்தச் சாபத்தை விடக் கொடியது என்பதை உணர்வதே உள்ள உரம் படைத்தோர் கடமை. அந்தக் கடமையைத்தான், இருபதாண்டுகளுக்கு மேலாக, தமிழகத்தில், விளம்பரபலமற்ற ஒரு கூட்டம், தன் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு, பணியாற்றிக் கொண்டு வருகிறது. சுயமரியாதைக்காரர்கள் என்று அழைக்கப்படும் அறிவுப் படை ஒன்றுதான், இந்தச் சாபத்துக்கு அஞ்சாமல், பழமையின் கொடிய விளைவுகளைத் தாக்கித் தகர்த்த வண்ணம் இருக்கிறது. இந்த அறப்போர் வீரர்களின் நோக்கத்தை அறியாதார், அவர்கள், சுடுசொல் வீசுவோர், சூழ்நிலை அறியாதார், கெடுமதியினர், என்று தூற்றுகின்றனர். உண்மை என்னெனில், அந்த அறப்போர் வீரர்களிடம், பிச்சைப் புத்தியில்லை. பேடித்தனம் இல்லை. பித்தலாட்டமில்லை. அச்சமுமில்லை, நச்சரவு புற்றுக்குள் ஒளித்திருப்பது போல, நெஞ்சிலே நயவஞ்சகம் கொண்டு; உதட்டிலே உபசாரச் சொல்லை ஒட்டவைத்துக் கொண்டு வரும், கெட்டவர்களுமல்ல. சிந்தனையில் சூது இல்லை. எனவே அவர்தம் சொல்லிலே, சூட்சம வலை இல்லை; மனதிலே குழப்பம் இல்லை, எனவே பல பொருள் தரக்கூடிய பதங்களைக் கோர்த்து பசப்பு மாலையாக்கும் பழக்கமில்லை. உடனடியான பலனையோ, சொந்த உயர்வுக்கான பரிசையோ, எதிர்பார்த்துக் காரியம் ஏதும் செய்வதில்லை—ஒரு பெருங்குடி மக்களின் சுயமரியாதை, சில சுயநலக்காரரால் சூறையாடப்படாமலிருக்க, வழி வகை தேடுவதையே வாழ்க்கையிலே ஒரே குறிக் கோளாகக் கொண்டிருப்பதால், தாக்குதல் அவரைத் தாள் பணியச் செய்வதில்லை, வஞ்சனையும், அவரை வளையவைப்பதில்லை—மிரட்டல் கண்டு மருள்வதில்லை, பிடிக்குச் சிக்காது, வலையில் வீழாது, தலையைச் சாய்க்காது, வசைமாரியைப் பொறுத்துக் கொண்டு, வந்தது வரட்டும் என்று, வாகை சூட முடியுமா முடியாமலே போகுமா என்பது பற்றிய சிந்தனையுமற்று, குறிக்கோளை மட்டுமே கருத்தில் கொண்டு, அறப்போர்ப் பாதையில் அஞ்சாது செல்கின்றனர். வேறு சிலருக்கு, பரிசு கிடைத்ததும், பவிஷு வந்ததும், அவர்களுக்குத் தெரியாமலில்லை, ஆனால், கொப்பும் கொண்டைத் திருகும்போட்டு, வர்ணச்சட்டையும் வாலுக்கு மணியும் பூட்டிக் குரங்கைக் கூத்தாட வைப்பவன், தன் பிழைப்புக்காக அதைச்செய்கிறானேயொழிய, குரங்கினிடம் 'பிரேமை' கொண்டல்ல; அதுபோலத்தான், அறப்போரில் ஈடுபட்டுப் பணியாற்றி, அவதிக்காளான மக்களை ஆண்மையாளர்களாக்கும் அரிய காரியத்தைச் செய்வதை மறந்த, அற்பர்களுக்குத் தரப்படும் அந்தஸ்து, அடிமைக்குத் தரப்படும் அலங்காரச் சட்டையே தவிர, உரிமைச் சின்னமல்ல என்ற உண்மையை உணர்ந்து, அவர் வழி செல்வது கூடாது என்று தீர்மானித்து, கல்லும் முள்ளும் நிரம்பியது எனினும், கடமைப் பாதையிலேதான் கருத்தில் தெளிவுள்ளோர் செல்லவேண்டும் என்று தீர்மானித்து அவ்விதமே செல்கின்றனர். அவர்களுக்குள்ள எதிர்ப்பு, பலமானது, பல்வேறு வகையுடன் கூடியது—எனினும், அந்த அறிவுப்படையின் தாக்குதல், வெற்றியைப் பெற்றுத் தராமல் போகவில்லை. நாட்டுமக்களின் இன்றைய கேவல நிலைமையைக் கண்டு, அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்த இந்த அறிவுப்படை, நாட்டு மக்கள், வளர்ந்து வரும் உலகிலே, வளராத நிலையிலேயே உள்ளனர் என்பதையும், அவர்களை வளரவிடாது பழமை தடுக்கிறது என்பதையும் கண்டறிந்து, வளம் நிறைந்த நாட்டு மக்கள், வகையற்றவர் போல வறுமையில் உழன்று, அறியாமையில் அமிழ்ந்து போயிருக்கும் கொடுமையைப் போக்கியேயாகவேண்டும், என்று தீர்மானித்து, கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு பணிபுரிகின்றனர்.

அங்கம் தங்க நிறம், ஆனால் கண்ணில் வெள்ளைப்பூ! முக முழுவதும் வடுக்கள்! விழியில் பழுதும், முகத்தில் வடுக்களும் இல்லாதபோது, அவள் எவ்வளவு அழகியாக இருந்திருப்பாள் என்ற எண்ணம், பரிதாபத்துக்குரிய நிலையிலுள்ள அந்தப் பாவையைக் கண்டதும், ஏற்படாதா? மரக்கட்டைகளா நாம்! மனம் உள்ள மக்கள்! அவளைக்கண்டதும், அழகி! ஆனால் அம்மை நோயினால் அலங்கோலப் படுத்தப்பட்டாள், என்று கூறாமலிருக்க முடியுமா! அந்த நோயினால் அவள் அடைந்த அகோரத்தைக் கண்டதும், அவளுடைய முன்னாள் அழகு பற்றியும் எண்ணாமல், "ஆஹா! "அம்மை நோயின் அற்புதமான ஆற்றலே ஆற்றல்! அபாரமான சக்தி! பாரீர், அதன் வெற்றியை! இவள் பத்தரை மாத்துத் தங்கத்தால் செய்த பதுமை போலத்தான் இருந்தாள். சிறு உளிகொண்டு செதுக்குவதுபோல், இவள் முகத்தை, அம்மை, செதுக்கி வைத்திருக்கிறது. அம்மை நோயின் அபாரமான வெற்றிக்கு இவளே ஓர் சான்று!" என்று யாரேனும் கூறுவரா!

நல்ல அழகு, கைகால்களோ தங்க உருளைகள்! கண்களோ, வைரமணிகள்! மேனி பசும்பொன்! மழலை பேசும் பருவம்! ஆனால் பேசமுடியாது! தொட்டிலில் கிடக்கையிலேயே, ▪லிப்புநோய் கண்டது—குழந்தை பேசும் சக்தியை இழந்தது—இந்நிலையில் உள்ள குழந்தையைக் கண்டதும் அந்த வலிப்புநோய்க்கு வாழ்த்துப்பா, பாடுவரோ?

சரிந்தசுவர், அழிந்த தோப்பு, அலங்கோலக்கூரை, இவைகள்போல, நிலை குலைந்த இனம், ஏதோ ஓர் காலத்தில் ஏதோ ஓர் பகைப் புயலால் தாக்குண்டதால் கெட்டது, என்பதை நினைவூட்டுவது இயல்பு. அப்போது நிச்சயமாக, நாசம் விளைவித்த பகைப் புயல் வீசாதிருந்திருக்குமானால், அந்த இனம், எவ்வளவு முன்னேறி இருந்திருக்கும் என்பது பற்றிய எண்ணம் பிறக்காமலிருக்க முடியுமா?

அது போலவே, வளமிக்க நாட்டு மக்கள், ஒருகாலத்தில் வாழ்ந்தவர்கள், இன்று இருக்கும் கேவல நிலைமைக்கு காரணம் இன்னது என்று தெளிவாகத் தெரிந்த பிறகு, அதனை வெளிப்படையாகக் கூறாமலிருக்கவோ, பரிகாரம் தேடாமலிருக்கவோ, அங்ஙனம் தேடும்போது, பகை மூண்டால் பணியக் கூடாது என்று உறுதி கொள்ளாதிருக்கவோ முடி

(12 பக்கம் பார்க்க)

## அடுத்த இதழ்

9—5—48-ல் வர இருக்கும் "திராவிடநாடு" தூத்துக்குடி மாநாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டு, 16—5—48-ல் மாநாட்டு நிகழ்ச்சிகளுடனும், மேதினக் கட்டுரைகளுடனும் வெளிவரும் என்பதை ஏஜண்டுத் தோழர்களுக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.


# திராவிட நாடு

காஞ்சி] 2—5—48 [ஞாயிறு


## தூத்துக்குடி மாநாடு

*

மகாராஜாக்கள், கார் ஓட்டுகிறார்கள்!

மன்னர்கள், சிரம் தாழ்த்துகிறார்கள்!

தூதுவர்கள் துதி பாடுகிறார்கள்!

ராஜதந்திரிகள், பேட்டி காணத் தவம் கிடக்கிறார்கள்!

முதலாளிமார்கள் முகமன் கூறுகிறார்கள்.

வெளிநாட்டு வல்லரசுகள் நேசம் கொண்டாடுகின்றன.

பண்டிதநேரு, காஷ்மீரம் வந்து சேர்ந்தார்; விமான நிலயத்தில், காஷ்மீர் மகாராஜா அவரை வரவேற்று உபசரித்து, தனது மோட்டாரில் ஏற்றிக்கொண்டு, அரண்மனைக்கு, மோட்டாரைத்தானே ஓட்டிக்கொண்டு போனார்.

காஷ்மீர மகாராஜா, கார் ஓட்டுகிறார்! யாருக்கு?

"நமது சமஸ்தானத்துக்குள், நுழைய நாம் அனுமதிக்க மறுக்கிறோம். ஆகவே இந்த எச்சரிக்கையைக் கண்டவுடனே, நமது ராஜ்யத்தை விட்டு, வெளியேறிவிட வேண்டும்" என்ற ஆணவமான உத்தரவை, எந்தப் பண்டித நேருவுக்குப் பிறப்பித்தாரோ, அவருக்கு!

இந்தக் காட்சியைக் கண்டு களித்தவர், அதே காஷ்மீர சமஸ்தானத்தில், மன்னராட்சிக்கு எதிரிடையான புரட்சி நடத்தி, சிறைக்கோட்டத்தில் தள்ளப்பட்டவர்.

'அராஜகம்' செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஷேக்அப்துல்லாவின் எதிரில், சமஸ்தானத்துக்குள் நுழையக்கூடாது என்று தடுக்கப்பட்ட நேருவை, தடைஉத்தரவு பிறப்பித்த மன்னர், மோட்டாரில் அழைத்துச் செல்கிறார், அரண்மனைக்கு, விருந்துக்கு!!

படேல் பவனி வந்தால், பக்கத்திலே பத்துப் பனிரண்டு 'ராஜாக்கள்' பாராக்குக் கூறிக்கொண்டு வருகிறார்கள்.

பிடி படேலே! — என்று ஆர்ப்பரித்த ராஜாக்களின் தலையிலே, 'முடி' சூட்டி மகிழ்விக்கிறார், சர்தார் படேல்.

ஆமாம்! இந்த அற்புதமான காட்சிகள், அகமகிழ்ச்சி யூட்டுகின்றன, எமது கட்சியின் செல்வாக்கு உச்சநிலை அடைந்துள்ளதைக் காட்டுகின்றன, மன்னாதி மன்னர்கள் மண்டியிடுகிறார்கள், எமது தலைவர்கள் முன்பு! எந்தச் சமஸ்தானாதிபதியின் வாழ்வும் எமது நேருவின் பேனா முனையில் இருக்கிறது— என்று பூரிப்புடனும் பெருமையுடனும், கூறிக்கொள்ள, காங்கிரஸ் நண்பர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அவர்கள் மகிழ்ச்சி அடைவது இயல்புதான்—ஆனால், சூட்சமத்தைக் கண்டறிந்தால், மருட்சியே அதிகரிக்கும்—மகிழ்ச்சி மங்கும்.

வெள்ளை ஏகாதிபத்யம் இருந்த வரையில், இந்த மன்னர்கள், துரைமார்களுக்குத் தூபதீப நைவேத்யம் செய்து, தங்கள் தர்பாரை நடத்திக்கொண்டு வந்தனர். இப்போது, அதே பூஜா முறையின் மூலம், புரட்சி வீரர்களை, புது நண்பர்களாக்கிக் கொண்டனர்; இந்தப் புதிய பூஜையும், முன்பு நடத்திவந்த பரங்கிப் பூஜையும், இரண்டும், அவர்களைப் பொறுத்தவரையில், ஒரே பலனை, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் பலனைத் தந்திருக்கிறது; அவர்களின் இலாபம் குறையவுமில்லை, நிலைமை, முன்பிருந்ததைவிட எந்த விதத்திலேயும் குறைந்துவிடவில்லை—தர்பார் நடந்து கொண்டுதான் இருக்கிறது, முன்பு, துரைமார் தயவால், இப்போது காங்கிரஸ் தலைவர்களின் தயவால்! கருவியை மாற்றிக்கொண்டார்கள், காரியம் மாறவில்லை.

அதுபோலவே, முதலாளிமார்கள், 'தேச விடுதலைப் போருக்கு' உதவுவதாகக் கூறியும், அன்னிய நாட்டினர் அடிக்கும் கொள்ளையைத் தடுக்கும் அரும்பணி புரிவதாகச் சொல்லியும், இதுநாள்வரை தங்கள் ஆதிக்கத்தைக் காத்து வந்தனர்—இப்போது, பொருள் உற்பத்திப் பெருக்கம் என்ற பேச்சைப் பரப்பி, தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

வல்லரசுகளின் பிரதிநிதிகள், வகைவகையான புன்னகை காட்டி, வியாபாரச் சலுகைகளும், ஒப்பந்தங்களும் செய்துகொள்ளவே, துதி பாடுகின்றனர்.

உலகையே, இருமுகாம்களாக்கி, அணு குண்டு பண குண்டு எனும் இரண்டையும் வீசி, ஆதிபத்யத்தை நிலை நாட்டும் நோக்கம்கொண்ட அமெரிக்காவோ, அற்புதமான காதல் கீதம் பாடுகிறது, டில்லி தர்பாரில்!!

காங்கிரஸ், உச்சநிலை அடைந்துவிட்டது, உலகுக்குத் தன் செல்வாக்கை ஐயமின்றி எடுத்துரைக்கும் நிலையைப் பெற்றுவிட்டது, நாடு ஆள்கிறது, முடிதரித்த மன்னர்களை, முன்னோடும் பிள்ளைகளாகவும், பெற்றுவிட்டது. கடற்படைக்கு உத்தரவு பிறப்பிக்கிறது, தரைப்படையை நடத்துகிறது, விமானப் படையை நடத்துகிறது. இனி, உயர்வதற்கு, இடம் இல்லை!!

ஒரு கட்சி அடையக்கூடிய உச்சநிலையைக் காங்கிரஸ்கட்சி அடைந்துவிட்டது, என்பது மட்டுமல்ல, இந்தக் கட்சிக்கு, போட்டியாகவும், சமபலமுடையதாகவும், வேறோர் கட்சி உருவான முறையிலே இல்லை, என்று கூறத்தக்க நிலை இருப்பதால், ஏகபோக மிராசு பாத்யதை ஏற்பட்டுமிருக்கிறது. அட்லி இல்லாத சர்ச்சிலாக, காங்கிரஸ் கட்சி இருக்கிறது!

நாம், அதன் நிலையைக் குறைத்து மதிப்பிடும் அரசியல் கபோதிகளல்ல; அந்தக்கட்சி, இன்று பெற்றுள்ள இடத்தை இழக்காமல் இருக்க, என்னென்ன சாதனங்களைக் கைவசம் வைத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் மறைக்க விரும்பவில்லை.

வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் காங்கிரசுக்கு, பலம் பொருந்திய பிரச்சார யந்திரங்களும், அமைப்

றினை நடத்தும் திறமை படைத்தவர்களும் உண்டு.

பணபலம், இன்று அமெரிக்கக் கட்சிகளுக்கு அடுத்தபடியாக, இங்குள்ள காங்கிரசுக்குத்தான் உண்டு, என்று கூறலாம்; அத்தகையது.

படித்துப் பக்குவம் பெற்று, இன்றுள்ள நிலையில் ஏதேனும் பதவியில் அமரவேண்டும் என்று எண்ணுபவர்கள் பலரும், அந்தக்கட்சிக்குக் காவலர்களாயும் ஏவலர்களாயும் உள்ளனர்.

வேதாந்தி ராதாகிருஷ்ணனும், விஞ்ஞானி ராமனும், வேதிய ரட்சகர் சர். சி. பி. யும், அந்தக்கட்சிக்கு அர்ச்சகர்களாக உள்ளனர்.

அந்தக்கட்சி அமைக்கும் ஆட்சிப் பொறியில் அமர்ந்து தமது திறமையை இரவல்தர, அம்பேத்காரோ, சண்முகமோ, பாபாவோ, மத்தாயோ, முகர்ஜியோ, தயங்குவதில்லை, கூப்பிட்ட குரலுக்குச் செல்கிறார்கள்.

ரேடியோ, அதன்வசம்! பத்திரிகைகள், அந்தக்கட்சிக்கு மாலைசூட்டி மகிழும் 'மகத்தான காரியத்துக்கே தமது திறமையைப் பயன்படுத்துகின்றன. இந்தச் சாதனங்களைக் கொண்டு காங்கிரஸ், தனக்குக் கிடைத்துள்ள, உச்சநிலையை, இழக்காமல் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்று எண்ணுவது இயற்கைதான். கூரியவாளும், பலமானகேடயமும் இருக்கும்போது, அச்சம் என்ன என்றுதான் போர்வீரன் கருதுவான். ஆனால், அவன் விழி, பழுதானால்!! வாளில் கூர்மை இருக்கும், வீசுவது சரியாக இராது—கேடயம் பலமாக இருக்கும், ஆனால்,எதிர்ப்பு எப்பக்கமிருந்து வருகிறது என்பதைக்காணமுடியாது! இந்த நிலையில் கட்சிகள் உச்சநிலை அடைந்ததுண்டு, அதன்பயனாகவே, அவைகளின் உள்ளம் பழுதானதுண்டு, உள்ளம் பழுதானால் பலவிதமான படை பலமும் பயனற்றுப்போகும்.

காங்கிரசின் இன்றைய உயர்நிலையைக்கண்டுபூரிக்கும் அன்பர்கள், இந்தச் சூட்சமத்தைத்தான், கவனிக்க மறுக்கிறார்கள். உள்ளம் பழுதாகிக்கொண்டு வருகிறது!!

உயர்நிலை அடைந்துள்ள காங்கிரஸ் ஊராளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறது — எனவே பலம் பொருந்திய கட்சியிடம், பற்றும் பாசமும் வைத்து, பல்வேறு பணிபுரிந்த மக்கள், தங்கள் கஷ்டம் தீர மார்க்கம் வகுத்துத்தரவேண்டும் என்று கேட்க, உரிமை பெற்றுள்ளனர்—கேட்கின்றனர்— கேட்டவண்ணம் இருப்பர்—உரத்தகுரலில்கேட்கத்தொடங்குவர் — உன்பலம், எங்கள் சுகவாழ்வுக்குப் பயன்படட்டும் என்று அறிவுறுத்துவர்—எமது நலனைக் கவனிக்காவிட்டால், உன்பலம் சரியும் என்று எச்சரிப்பர்-பலத்தை ஒழிப்போம் என்று கோபத்துடன் கூறுவர்—வரலாறு, கொதிப்பேறிய மக்கள் கோல் கொண்டோர்களை எல்லாம்கூட சாய்த்த சம்பவங்களின் தொகுப்பு!

உயர் நிலை, உல்லாச எண்ணத்தையும், யார் நமக்கு நிகராவர் என்ற ஆணவத்தையும் தருவதுபோலவே, ஒருகாரியமும் நமது நலனுக்குச் செய்யமுடியாதபோது, உயர் நிலை ஏன் இருக்கவேண்டும், என்ற எண்ணத்தைத்தான் மக்களுக்குத் தரும். அந்த எண்ணம் பலப்பட்டுவிட்டால் அந்த மக்களின் சக்தியின் முன்பு வேறெதுவும் நிற்கமுடிவதில்லை! ஆட்சிப்பீடத்திலிருக்கும் கட்சிக்குஇந்த உண்மை, சுலபத்திலே புலனாவதில்லை.

உள்ளம் பழுதாகிக் கொண்டிருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தென்படாமலும் இல்லை. ஊராளும் உயர்நிலையைக் காங்கிரஸ் பெற்று, உலகெங்கும்அதன்புகழ்பரப்பும்பிரதிநிதிகளை அனுப்பிவைத்துள்ளது என்றபோதிலும் நாட்டுநடப்புகளைக் கவனித்தாலோ, ஆட்சியாளர்களுக்கே ஆனந்தம் ஏற்படுவதாக இல்லை.

காஷ்மீரச்சண்டையோ தீரவில்லை—பஞ்சாயத்துக்குப்போன கதையோ, புளியமரமேறிப் பலாப்பழம் தேடும் கதையாக முடிந்தது.

ஹைதராபாத் பிரச்னையோ, நாளுக்கு நாள் வளருகிறது.

பாகிஸ்தானுடன் தொடர்போ, நேசமும் விரோதமும், மாறி மாறித் தோன்றுவதும் கருகுவதுமாக, இருந்துவருகிறது.

பர்மியநட்போ, மனுச் செய்து உரிமையையும் உடைமையையும் பாதுகாத்துக்கொள்ள முடியுமா, என்று மந்திராலோசனை செய்யும் விதத்திலே இருக்கிறது.

ஆப்பிரிக்காவிலே மூளைத்த அல்லலோ, அண்ணல் காந்தியாரின் மகனாரின் தலைமையிலே போராட்டம் நடந்தும்கூட ஒழியவில்லை.

உணவுக்குத் திண்டாட்டம், உடைக்கும் அக்கதியே! பணம்இருக்கிறது, பண்டம் இல்லை! ஆலைகள் உள்ளன, வேலைசெய்யும் நாட்களோ குறைவு! கடல்உண்டு, கப்பல்இல்லை!

ஒருபுறத்திலே, முடிசூட்டு விழாக்கள், பவனிகள், ராஜப்பிரமுகர்களுக்கு வாழ்த்துகள், முதலாளிமார்களுக்கு முகமன், வல்லரசுகளின் பிரதிநிதிகளுடன் விருந்துகள்!

மற்றோர் புறத்தில், விசாரணையின்றிக் காவல், பத்திரிகைகள்மீது பாணம், ஆள்தூக்கிச்சட்டம், 144, தடியடி, கண்ணீர்புகைக் குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம்!—வேலைநிறுத்தப்புயல் — வயலில் வல்லடிகள் — வழிப்பறிகள் — கட்டி அடித்தல்—கொளுத்துதல்—கொலை கொள்ளை, இவ்வளவும்!!

தேன் ஒழுகும்நிலை, ஒருபுறத்தில்! தேள், கொட்டுவது போன்றநிலை, மற்றோர்புறத்தில்.

சமர்செய்த சண்முகம், நிதிக்குக் காவலர்! காங்கிரஸ் இன்னும் சில ஆண்டுகளில் அழிந்துபடும் என்று கூறும் அம்பேத்கார் சட்டத்தின் காவலர்! இதைப்பொறுத்துக்கொள்ளும், நிலை பிறந்துவிட்டது. இது மட்டுமா? சட்டமறுப்பையும் சத்யாக்கிரகத்தையும் சிறுபிள்ளைத் தனமென்று கேலிபேசிய கோபாலசாமிகளை, 'வக்கீல்களாக' அமர்த்த நேரிடுகிறது! ஆங்கில ஏகாதிபத்ய காலத்தில், வைசிராய்க்கு விசேஷ அதிகாரம் உண்டென வாதாடி, காங்கிரஸ் • தலைவர்களைச் சிறையிலிடத், தமது சட்ட நிபுணத்துவத்தைப் பயன்படுத்திய அல்லாடிகள்தேவைப்படுகிறார்கள் அரசியல் நிர்ணய சபைக்கு! கிருபளானி கண்டிக்க, ஜெயப்பிரகாஸ் தனிக்கடைவைக்க, சரத்சந்திரர் ஜல்லடம்கட்ட, எல்லைக்காந்தி எனக்கு இந்தத் தொல்லையே வேண்டாமென்று கூறிவிட்ட நிலை பிறந்திருக்கிறது.

தொழிலாளர்கள் தோல்லைக்காளாகி உள்ளனர். உழவர்கள் உள்ளம் ஒடிந்துபோயுள்ளனர். தீவிரவாதிகள் அடக்கு முறைத்தீயில் தள்ளப்படுகிறார்கள்.

இந்த அறிகுறிகள், சாமான்யமானவை அல்ல.

இவைகள், மறந்துவிடக்கூடியன, அல்லது மக்களை, பிரச்சாரபலத்தால் இவைகளை மறக்கச் செய்து

விடமுடியும், என்ற போதிலும், மக்கள், இங்கும் சரி, மாநில மெங்கும் சரி, மறக்க முடியாத சம்பவமாகவும், மனதை வாட்டும் சம்பவமாகவும், உத்தமர் காந்தியாரின் மரணம் ஏற்பட்டதும், உச்சநிலை அடைந்த கட்சியின் ஆளுகையின் போதுதான்.

வளர்ந்தபலம் — வளரும் பலமல்ல! உச்சநிலை—ஆனால் உறுதியானநிலை அல்ல! மக்களின் ஆதரவால் உயர்ந்த கட்சி—ஆனால் மக்களின் ஆதரவு நிலைக்கத்தக்க விதமான காரியத்தில் ஈடுபடும் கட்சி அல்ல.

மக்களின் ஆதரவு நிலைத்திருக்க வேண்டுமானால், மன்னர்களின் நேசமும், முதலாளிமார்களின் விசுவாசமும், மத்தாய்களின் கூட்டுறவும், விரும்பத்தக்கதாக இருந்திருக்கக் கூடாது.

ஆனால், இன்று காங்கிரசின் போக்கோ, சமதர்மம் எனும் சிறந்த இலட்சியத்தையே கேலிக்கூத்து என்று பேசத் துணியும் அளவுக்குச் சென்று விட்டது.

இலாப உணர்ச்சிதான் தேவை, என்று, டாட்டாக்கள் முன்னிலையில் நேரு பேசும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

ராணுவச்செலவு, போர்க்கோலம் பூண்ட நாட்டுக்கு உள்ளது போன்றுள்ளது. மத்ய சர்க்காருக்குள்ள வருமானம் 250 கோடி ரூபாய்—இதிலே பாதி, 125 கோடி ரூபாய் பட்டாளச்செலவு!! ஆள்பவர்களோ, அஹிம்சா போதகர்கள்—ஆட்சிக்கு வந்ததும், பாழான பட்டாளச் செலவை, அடியோடு ஒழித்தே விடுவோம் என்று பேசிவந்தவர்கள்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் இங்கு கொஞ்சுகிறார்கள். ஆனால், செயலில் நடப்பதென்ன? அந்தந்த நாடுகளும், தத்தமது உள்நாட்டில், உணவுப் பொருள், என்னவிலைக்கு விற்கிறார்களோ, அதைப்போல்மூன்று மடங்கு அதிக விலைவைத்து, இந்தியாவுக்கு விற்கிறார்கள்! 'ஆசிய ஜோதிகள்', இந்த அக்ரமவிலை கொடுத்து வாங்கத்தான் வேண்டி இருக்கிறது!

மற்றும் வட்டி கட்டும் செலவு, சம்பளச் செலவு இவைகளை நீக்கிப் பார்த்தால், 80 கோடி ரூபாய்தான் மிச்சமாகிறது, இதைக் கொண்டுதான் இந்தப் பரந்த உபகண்டத்துக்கு, பாதைகள் அமைத்து, படிப்பைப் பரப்பி, நோயைத் தடுத்து, மக்களின் நலனைப் பாதுகாக்கவேண்டும். வருமானம் 250 கோடி, இதிலே, வெடி மருந்துக்கும் சிப்பந்திக்கும் 170-மற்ற 80 கோடி ரூபாய்தான், மக்களின் நலனுக்கு!

மக்களின் மனதிலே மகிழ்ச்சி பொங்குமல்லவா!!

இந்தநிலைமை, பொதுவாக இந்தியாவுக்கு—நமதுநாடு —திராவிடம்— இந்திய பூபாகத்திலே பிணைக்கப்பட்டிருப்பதால், இந்தநிலைமை, நம்மையும் பாதிக்கத்தான் செய்கிறது, காஷ்மீர மலைச்சாரலில், திராவிட இரத்தமும் சிந்தப்படுகிறது, பணமும் கொட்டப்படுகிறது.

இந்தப் பொதுநிலையுடன், சிறப்பு நிலையும் உண்டு, அஃது என்னென்னில், நமது மாகாணம், எதற்கும் டில்லி நோக்கித்தவம் கிடக்கவேண்டி நேரிட்டுவிட்டது. ஆளும் கட்சி காங்கிரசானதால், அந்தக் கட்சியின் தலைமைப் பீடமும் சூத்ரதாரிகளும் வடநாட்டில் இருப்பதால், ஆட்சி முறையும் போக்கும், தென்னாட்டை வடநாடு ஆட்டிவைக்கும் விதமாக இருக்கிறது. உணவு உடை முதற்கொண்டு, மந்திரிசபைத் தகராறு வரையிலே, டில்லிக்குத்தான் மனு, செய்கிறது! இந்த நிலையை மேலும் உறுதிப்படுத்தும் விதத்திலே, அரசியல் நிர்ணயசபை திட்டம் தீட்டிவிட்டது, பலம்பொருந்திய மத்ய சர்க்கார் என்ற சாக்குக்கூறி, மாகாணங்களின் அதிகாரங்கள் பறிக்கப் பட்டுவிட்டன.

அரசியலில் இந்நிலை, ஆனால் இதனினும் மோசமான நிலைமை பொருளாதாரத்தில்! வடநாடு, சீமை! தென்னாடு, பட்டிக்காடு!! இந்த நிலையைத் திருத்தி அமைக்க, வழி இல்லை—தனிநாடு எனும் நிலைமை ஏற்பட்டாலொழிய வடநாட்டு ஆதிக்கத்தைத் தடுக்கவே முடியாது.

வடநாட்டுத் தொழிலானால் என்ன, தென்னாட்டுத் தொழிலானாலென்ன, முதலாளிகள் என்றால், விந்தியத்துக்கு மேலிருந்தாலும் கீழிருந்தாலும் ஒன்றுதானே, என்று கேட்கும் நண்பர்களை நாமறிவோம். தொழில்கள் யாவும் சர்க்கார் உடைமையாக இருந்தாலாவது, இந்த வாதம் ஓரளவுக்குப் பொருத்தம் பெறும் — ஆனால் சமதர்மமே இழித்தும் பழித்தும் இன்று பேசப்பட்டு, முதலாளித்வ முறைக்குப் புதியபிரசாரபலம் தரப்பட்டும் வருகிறது. வடநாட்டிலே உள்ள ஒரு பத்துக் குடும்பத்தினிடம்,பலகோடி மக்களின், வாழ்வு, அடகு வைக்கப் பட்டுவிட்டது. அந்தப் பத்துக்குடும்பமும், பரங்கி முதலாளியையும் அமெரிக்க முதலாளியையும் பங்காளிகளாக்கிக் கொண்டு, புதியதோர் பொருளாதார ஏகாதிபத்யத்தை உண்டாக்குகிறார்கள்.

ஆகவே வெளிநாட்டு முதலாளிமார்களுடன் கூட்டாகச் சேர்ந்துள்ள சுதேச முதலாளிகள் ஆதிக்கம் செலுத்தும் வடநாட்டின் ஆதிக்கத்தின் கீழ் திராவிடம் கொண்டுவரப்பட்டு, வடநாட்டுச்சரக்குக்குச் சந்தையாகவும், வெறும் விவசாய நாடாகவும் ஆக்கப்படுகிறது.

இந்த நிலையை, மக்களின் முன்னேற்றத்தில் அக்கரை கொண்ட யாரும், விரும்ப முடியாது.

இதென்ன பித்தம்? வடநாடும், தென்னாடும்! நாட்டை மேலும் பிளப்பதா?—என்று இன்று பேசுபவர்கள், காங்கிரஸ் தலைவர்கள். ஆளும் கட்சி என்ற எண்ணத்தாலும், உச்சநிலை அடைந்துள்ளகட்சி என்ற நினைப்பாலும், ஆதிக்கத்துக்கான சாதனங்கள் உள்ளன என்ற நம்பிக்கையாலும், உண்மையை மறுக்கவும், நியாயத்தை விரட்டவும் துணிகிறார்கள். நேர்மையான வாதம் புரியவும், அவர்கள் மறுக்கிறார்கள்.

அவர்களின் மறுப்புரையும் எதிர்ப்புரையும், அவர்களின் கட்சியின் நிலை எங்ஙனம் மாறித்தீருமோ, அது போலவே, அதற்கேற்றபடியே, மாறித்தீரும்.

எனவேதான், பலம் பொருந்திய கட்சியை, திராவிடர் கழகம், மறுத்தும் எதிர்த்தும் பேசிவருகிறது — உறுதியுடனும் நம்பிக்கையுடனும், உயர்நிலை, நிரந்தரமல்ல என்பது தெரிவதாலும், ஊராளும் போக்குச் சரியாக இல்லை என்பதாலும், மக்களின் உள்ளம் கவலைக் கூடாக ஆகிவருகிறதென்பது தெரிவதாலும், சட்டசபை வாயற்படியையும் தொட்டறியாத திராவிடர் கழகம், தன் கொள்கைகளையும் திட்டங்களையும் நாட்டிலே நம்பிக்கையுடன் பரப்பி வருகிறது, அந்த நம்பிக்கையும் வீண்போகவில்லை. அதோ தூத்துக்குடியில், கூடுகிறார்கள் திராவிடப் பெருங்குடிமக்கள், ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும். ஒரு ஆங்கில தினசரியின் ஒத்துழைப்புக் கூட அற்ற கட்சி, கல்லூரி காணக் கிழவரின் தலைமையில்நடக்கும்கட்சி,

பணப்பெட்டிகளைப் பகைத்துக் கொள்ளத் துணிந்த கட்சி, பழிபல வீசப்பட்ட போதும் பதைக்காமல் பதறாமல் பணியாற்றிவரும் கட்சி, பட்டம் பதவி கிட்டாது, பஞ்சாயத்து கோர்ட்டிலேகூட இடம் கிடைக்குமென்று உறுதிகூற முடியாது என்று பட்டவர்த்தனமாகக் கூறியே படைக்கு ஆள்சேர்க்கும் கட்சி, அரசியல் வெட்டுக்கிளிகளை விரட்டிய கட்சி, அரண்மனையினர் அன்புடன் அழைத்தபோது, ஆளை மயக்கிக் கொள்கையைக் கொல்லும் அந்த அரக்கு மாளிகை வேண்டாமென்று கூறி விட்டு, ஆலமரத்தடி போதும், என்று கூறியகட்சி, இன்றைய ஆட்சியாளர்களின் நேசத்தைக்கூட, தமது 'அலாதியான' திறமையால் பெறும் குமாரராஜாக்களின் அணைப்பிலிருந்து, தன்னை விடுவித்துக் கொண்டகட்சி, அந்தாதியும் அகவலும் வெண்பாவும் பிறவும் கற்ற தமிழறிஞர்கள், நம்மால் ஆகுமா என்று இருந்த போது, கட்டாய இந்தியை எதிர்த்து ஆணும் பெண்ணுமாக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறைபுக வழிசெய்துதந்த கட்சி, வீழ்ச்சியுற்ற தமிழகத்துக்கு ஓர் எழுச்சியை உண்டாக்கிய கட்சி, என்ன உண்டு உங்கள் கட்சியில் என்று ஏளனம் பேசிய எண்ணற்ற வாலிபர்களை அணிவகுப்பில் கொண்டுவந்து சேர்த்துக்கொண்ட கட்சி, வைத்யநாதர்களின் கனவிலும் சங்கராச்சாரிகளின் நினைவிலும், நின்று, காலம் பேசுகிறது கேள்! கபடம் இனி நடவாது, காண்! என்று கூறிடும் கட்சி, காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே, 'வக்கீல்களை'ப் பெற்றுள்ள வாய்ப்புப்பெற்ற கட்சி, புரோகித ஆட்சிக்கு, பழமையின் பிடிப்புக்கு, மதமமதைக்கு, ஜாதித் திமிருக்கு, மூடநம்பிக்கைக்கு, முதல் நம்பர் எதிரியாக அமைந்த கட்சி, வைதீகக்கோட்டைமீது முதல் குண்டுவீசிய கட்சி, தமிழனின் உள்ளத்தின் எதிரொலி போன்றகட்சி, ஆச்சரியக்குறி யாகத் துவக்கப்பட்டு, கேள்விக்குறியாக வளர்ந்துள்ள கட்சி, உடனடிப் பலனை உதறித் தள்ளிவிட்டு, உள்ளத்திலோர் புரட்சியை ஊட்டிவரும் கட்சி, பட்டி தொட்டிகளிலேயும் பரவும்கட்சி, பல்கலைக்கழகங்களைப் பாசறைகளாகக் கொண்ட கட்சி, பகுத்தறிவுப் படைவரிசைக்குப் பயிற்சிதரும்கட்சி, நேர்மையான ஆட்சியை, எதிர்க்கட்சியினர் அமைத்தாலும், ஆதரிக்கும் கட்சி, அரசியல் சூதாட்டத்தை மதிக்க மறுக்கும் கட்சி, சாக்ரடீசின் பரம்பரை என்ற நிலையைப்பெற்ற கட்சி, சாகசத்தால்சாகாமல், வளரும்கட்சி, புதிய சமுதாயத்தைக் காணவேண்டுமென்ற உறுதியை, உள்ளத்தில் கள்ளமில்லாதார் யாவருக்கும், எந்தக் கட்சியினராயினும்சரியே ஊட்டும் கட்சி, துரோகி—பதவிப்பித்தர்—தாசர்—எனும் பல்வேறு இழிசொற்களையும் பழிப்பேச்சுகளையுமே மாலையாகத் தந்தபோதும், மனந்தளராமல், உண்மைவெல்லும் என்ற உறுதியுடன் உழைத்து வந்து—உழைத்துவரும் கட்சி — தூத்துக்குடியில் கூடுகிறது—திராவிடத்தின் துயர்நீக்க வாரீர், இழிவுதுடைக்க ஒன்று சேரீர், புது வாழ்வுபெறப் பணிபுரிவீர், என்று நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்ள.

திராவிடர் கழகத்தின் வளர்ச்சியைக்காட்டுவது ஓட்டு வேட்டைக்குமல்ல, பதவியில் ஒட்டவுமல்ல— கொள்கைகள் எவ்வளவு உயர்ந்தனவாக இருப்பின், ஆர்வமும் நம்பிக்கையும் எவ்வளவு ஆழ்ந்ததாக இருப்பின், 'அரசியல் அனாதைகள்' என்று ஏளனம் செய்யப் பட்டும்கூட சொல்லடியும் கல்லடியும் பட்டும்கூட, சொகுசான அரசியல் வாழ்வுக்கு 'சொர்க்கவாசல் கதவு' திறந்திருந்தும், அரசியல் இலாப மற்ற கட்சியிலே ஆயிரமாயிரம் இளைஞர்கள் சேர்ந்திருப்பர், என்ற ஓர் உண்மையை, நாட்டினருக்கு எடுத்துக்காட்ட. நாட்டு விடுதலைக்கு நாம் கூறும் விளக்கம், மக்கள் முன்னேற்றத்துக்கு நாம் கூறும் விளக்கம், தேவை அல்லவென்று, யாரும்தள்ளிவிடமுடியாது-சாத்தியமல்ல என்று வீரர் யாரும் கூறார். இந்த நம்பிக்கையே, நமது படைபலம். அதன் வெற்றிகளோ மகத்தானவை; சென்னைமாநாடு-சிறையில்பெரியார்! திருவாரூர் மாநாடு-திராவிடர்எனும் உணர்வுக்கு வழி; சேலம் மாநாடு—பதவியாளர்களை நீக்கும் துணிவு—திருச்சி மாநாடு—பெரியாரை நிரந்தரத்தலைவராகக்கொண்ட பெருமை—இதோ தூத்துக்குடி—ஓயாதஉழைப்பின் விளைவாக அமையும் உன்னத மானசித்திரம்.

இந்த உன்னதத்தை, உலகு உணரச்செய்யவேண்டிய உயர்பணி நமது—நமக்குள் ஒருவருக்கொருவர் பலத்தை அளந்துகொள்ளும் உளுத்துப்போன காரியம் அல்ல. திராவிடர்கழகத்தின் நோக்கம் தூய்மையானது என்பதை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளச் செய்யும் ஓர் உன்னத முயற்சி இம்மாநாடு. திராவிடர் கழகம் இன்று சென்னை மாகாணத்தில் நன்கு வளர்ந்துள்ளது. ஓரிருதனிப்பட்டவர்கள் சில பல இடங்களில் போடும் கூச்சல் என திராவிடர் கழகம் அலட்சியப் படுத்தப்பட்டதுபோய், மாகாணமெங்கும் அதன்கொள்கைகள் பரவி கட்சியின் செல்வாக்கும் பலமும் வளர்ந்துள்ளன. ஏறத்தாழ முந்நூறு கிளைகளும், ஐம்பதினாயிரத்துக்குக் குறையாத அங்கத்தினர்களும் உடைய கட்சியாக திராவிடர் கழகம் இன்று விளங்குகிறது. இந்த வளர்ந்துவரும் சக்தி, மற்றக்கட்சியினருக்கு பொறாமையையும், ஆச்சரியத்தையும் கொடுக்கவே செய்யும். பணபலமும், பத்திரிகை கூட்டங்களும், வெளிநாட்டில் விளம்பரமும், உள்நாட்டில் அமோகமான ஆதரவும், அரசியல் கட்சிக்கான பண்புகளையும் பலத்தையும் பெற்ற அரசியல் கட்சிகள் பாமரர்களிடம் செல்வாக்கையும் மதிப்பையும் இழந்துவருகிற நேரத்தில் முன்கூறப்பட்ட எத்தகைய வசதிகளையும் பெறாமல் திராவிடர் கழகம் தன் கொள்கையின் பக்கம் நாட்டு மக்களின் கவனத்தைத்திருப்ப முடிந்தது. தன் இடைவிடாத பிரச்சாரத்தால் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது. பட்டிதொட்டிகளில் கூடிய கூட்டங்கள் பஜாஜ்மாளிகைக் கூட்டங்களைவிட அதிகப்பலனை அளித்திருக்கின்றன. சேலம் மாநாட்டிற்குப்பின்பட்டம் பதவியாளர் நம் கட்சியில் அட்டையைப்போல் ஒட்டிக்கொண்டிருக்கும் நிலை ஒழிந்தது. ஆனால், அதேநிலை 'பட்டப்பதவியாளர் எம்மிடம் இல்லை'' என்ற தீர்மானமே மக்களின் நன்மதிப்பை நம்மிடம் வரவழைக்கும் நற்சாட்சிப் பத்திரமாயிற்று. மந்திரிசபைகளை அமைக்கும் தந்திரக்காரர்களை கட்சி இழந்தது. கணக்கற்ற மாணவர்களின் ஒத்துழைப்புகட்சிக்குக்கிடைத்தது. மந்திரிகளின் பட்டணப் பிரவேசங்களைவிட மாணவர்களின் கிராமச் சுற்றுப்பிரயாணம் அதிக பலனை அளித்துள்ளது. என்றுமில்லாத அளவுக்குத் திராவிடர்கழகக்கொள்கையைப்பரப்பும் ஏடுகள் வெளிவந்துள்

ளன. பேச்சுமேடையும், எழுத்துவலியும் திராவிடர் கழகத்தைச் சார்ந்தனவாகிவிட்டன. சேலத்திலிருந்து தூத்துக்குடிவரை—வழியில் கல்லும் முள்ளும் நிரம்பியிருந்தால்கூட, பிரயாணத்தின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதே. பிரயாணத்தை ஆரம்பித்தவர்களே ஆச்சரியப்படும் விதத்தில், அவர்கள் எண்ணிப்பார்த்ததை விட அதிகமாகக் கழகம் வளர்ந்திருக்கிறது, கட்சிக்கொள்கைகள் பரவியிருக்கின்றன. உழுதவன் தன்பலனை சேர்த்துப் பார்த்து மகிழ்வதைப் போல, தூத்துக்குடி மாகாண மாநாட்டில் கட்சியின் வளர்ச்சியும், அது மக்களிடை அடைந்துள்ள செல்வாக்கின் அளவும் தெரியும்.

தூத்துக்குடி மாநாட்டிற்கு கழகத்தின் தலைவரான பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பெரியார் ஒரு தனிப்பட்ட தலைவர் என்ற நிலையிலிருந்து ஒரு இயக்கமாக மாறிவிட்டார். அவரின் கொள்கைகளைப் பின்பற்றி, "திராவிடர்க் கழகம் ஒன்றுதான் நடக்கின்றது என்று கூறமுடியாது. சரியாகக் கவனித்துப் பார்த்தால், அவர் விலகி வந்ததாக நினைத்த காங்கிரஸ் அவர் பக்கமே வந்துகொண்டிருக்கிறது. பெரியார் எந்தக் கொள்கைக்காக காங்கிரஸை விட்டு வெளியேறினாரோ, அதேகோட்பாடுகள் இன்று காங்கிரஸ் மந்திரி சபையின் அதிகாரபூர்வமான கோட்பாடாகிவிட்டது. பெரியாரின் பேச்சு இன்று ஓரிடத்திலிருந்து மட்டுமல்ல, பல பக்கங்களிலிருந்தும் வருகிறது. ஓமந்தூரார் பிரதம மந்திரியான வெற்றியில் சட்டசபையில் மந்திரி சபையினர் அளிக்கும் பதில்களில்,...........பெரியாரின் குரலைக் கேட்கிறோம். பெரியாரின் குரல் வலுத்து வருகிறது. தேங்கிக் கிடந்த தமிழ்நாட்டின் சிந்தனையில் ஒரு அதிர்ச்சியை உண்டாக்கினார், அந்த அதிர்ச்சியில் உண்டாகிய பல அலைகளே இன்று பல அரசியல் கட்சிகளுள் பலகுரல்களை உண்டாக்கியுள்ளன. அலைகள் கிளம்பிய இடம் ஒன்றுதான். அதன் பிரிவுகளே பிற சமுதாயக் கருத்துக்களில் பெரும்புரட்சியை உண்டாக்கி, அரசியல் உலகில் தென்னாட்டில் காங்கிரசுக்கு எதிர்க்கட்சி என்று கூறும் அளவுக்கு பிறிதொரு கட்சியை வளர்த்துள்ளது. இந்த வெற்றியைப் பெற்ற பெரியார் தூத்துக்குடி மாநாட்டில் தலைமை தாங்குகிறார்.

பெரியாரின் படைவரிசை வளர்ந்துள்ள நிலையில் அரசாங்கக் கட்சியாக விளங்கும் காங்கிரஸ் அமைப்பின் பலம் குறைந்து வருகிறது. மக்கள் அதன்மீது வைத்த நம்பிக்கையும், மதிப்பும் இன்று தேய்ந்துவிட்டன. துன்பங்கள் யாவும் மடிந்து, இன்பங்கள் எங்கும் சூழும் என்று காங்கிரசார் மக்களுக்குத் தந்த வாக்குறுதி காங்கிரஸ் பதவி ஏற்றுப் பத்து மாதங்களாகியும் பலித்ததாகத் தெரியவில்லை. எதிர்பார்த்த நன்மைகள் கிட்டவில்லை என்று தெரிந்தவுடன் மக்கள் காங்கிரஸ் கட்சியின்மேல் வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர். எனவே தங்களுக்கு வழி காட்டும் வகையில் மற்றொரு கட்சியின்மீது தங்கள் கவனத்தைத் திருப்பியுள்ளனர். தென்னாட்டில் காங்கிரசுக்கு எதிர்வரிசையில் போராடிய கட்சி திராவிடர் கழகமேயாகும். காங்கிரசின்மீது ஏற்பட்ட நம்பிக்கையின்மையின் பிறகு, திராவிடர் கழகத்தின்மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு வருகிறது. இந்த நம்பிக்கையின்மீது கொள்கையும் பரவியுள்ளது.

அரசாங்கத்தின் எதிர்க்கட்சியாக சட்டசபைக்கு வெளியில் இருந்து வரும் திராவிடர் கழகத்தின்மீது அரசாங்கத்தின் அடக்குமுறை வீசப்பட்டது. மாறுபட்ட வகுப்புவாத அரசியல் தொண்டர் படைகளை மத்திய சர்க்கார் கலைத்தனர். அதைத் தொடர்ந்து, சென்னை சர்க்கார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கருப்புச் சட்டைச் சின்னத்தை அகற்றிவிட முயன்றது. திராவிடர் கழகத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ள மோதுதலின் ஆரம்பம் இதுவேயாகும். அரசாங்கத்தின் தடை இருகட்சிகளுக்குமிடையிலிருந்த தூரத்தை அதிகரிக்கச் செய்வதுடன், அரசாங்கத்தின் முழு அடக்குமுறை திராவிடர் கழகத்தின் மீதும், அதன் பத்திரிகை, முதலியவை மீதும் விழலாம் என்ற எண்ணம் அப்பொழுது உண்டானது. அடக்குமுறை வீசப்பட்டால் அதை மக்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்வார்களா? அன்றி, திராவிடர் கழகத்தின் பக்கம் சார்ந்து நிற்பார்களா ? இந்தக்கேள்வி அடக்குமுறையை வீசுவதற்கு முன் அரசியலார் கேட்டுக்கொள்வார்கள். கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் கட்சி, மக்களிடம் அடைந்துள்ள செல்வாக்கை அரசியலாருக்குக் காட்டிக் கொள்ள விரும்பும் முறையில் தூத்துக்குடி மாநாடு கூடுகிறது. கட்சியிலுள்ளவர்களுக்கே தங்கள் கட்சியின் பலத்தையும், மக்களை தன் கவனத்துக்குஇழுக்கும் பிரசாரபலத்தின் அளவையும் மதிப்பிடத் தூத்துக்குடி மாநாடு உதவும்.

திராவிடத்தின் விழிப்புக்கும் எழுச்சிக்கும் ஓர் எடுத்துக்காட்டாக, திராவிடப் பெருங்குடி மக்களின் உயிர்ப் பிரச்னை எது என்பதை ஊராள்வோரும் ஊராரும் உலகினரும் உணர, தூத்துக்குடி மாநாடு பணி புரியவேண்டும்.

காங்கிரசாட்சியிலே 'கண்டறியாதன கண்டோம்' என்று கலங்கும் மக்களுக்குக் கைகொடுக்கும் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

சமதர்ம இலட்சியத்துக்கே வந்துள்ள ஆபத்தைப் போக்க வேண்டும்.

பாட்டாளிகளின் விடுதலைக்கான பல்வேறு கிளர்ச்சிகளிலே, நமது பங்கு என்ன என்பதை நிர்ணயித்து வழிகோலவேண்டும்.

மதசமுதாய இயல்களிலும் பொதுவாகவே அறிவுத் துறையிலே நாம் கூறும் புது நெறிகளுக்கு, அரசியலில் எதிர்க்கட்சி என்று கருதப்படும் காங்கிரஸ் வட்டாரத்திலேயும், எத்தகைய ஆதரவு கிடைத்த வண்ணம் இருக்கிறது என்பதை அறிந்து, அவர்களின் ஆதரவை மேலும் பெறவும், நம் நோக்கம், அறநெறியை அடிப்படையாகக் கொண்டது என்பதை அவர்கள் அறிந்து நம்முடன் கலந்து பணியாற்றவும், வழிகாண இம்மாநாடு முயற்சிக்கவேண்டும்.

விஞ்ஞானத்தின் மேன்மை, பகுத்தறிவின் சிறப்பு, சமதர்மத்தின் உயர்வு, இவைகளை நாடறியச்செய்ய நல்லதோர் பிரசார முறை ஏற்பட இந்த மாநாடு உதவட்டும். தூத்துக்குடி மாநாடு, நாட்டிலே, இந்திய உபகண்டத்திலேயே, எல்லா கட்சிகளுக்குமே, புதிய திட்டங்கள் புதிய நிலைமைகளால் தேவைப்படும் நேரத்தில் நடைபெறுகிறது. நாமும், உலகையும், இந்த உபகண்டத்து நிலைமையையும் நமது உள்ளத்தில் இருத்தி, நமது அடிப்படை கொள்கைகளுக்கு ஊறு நேரா வகையில், வேலைத்திட்

டம் அமைத்துக்கொள்ள இந்த அருமையான நேசத்தையும் ஆர்வத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த உயர்ந்த நோக்கம் நமது உள்ளங்களில் பதிந்துவிட்டால், சில்லறைச் சச்சரவுகளைப் பற்றிய சிந்தனையே ஒழியும்.

25 ஆண்டுகளாக இந்நாட்டில் சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பினோம். பணம் படைத்தோரின் எதிர்ப்பு, மற்ற அரசியல் கட்சிகளின் அலட்சியம், எதிர்ப்பு, பத்திரிக்கைகளின் இருட்டடிப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் வளர்ந்தோம். ஜஸ்டிஸ் கட்சியைக் கைப்பற்றி அதில் இருந்த "பெரியவர்களை" வெளியேற்றிப் பொருளாதார சமத்துவத்தையும், திராவிட நாடு தனியாட்சியையும், பேதமற்ற சமுதாய அமைப்பையும் நோக்கமாகக்கொண்டுமூன்று முனைகளிலும் போராடினோம்.

சேலம் மாநாட்டில் கட்சி மக்களுக்குச் சொந்தமாகியது. தேர்தல் நோக்கம் இல்லை. பதவி வேண்டாம். இவைகளில் நாட்டமுடையோர் சென்றுவிடுங்கள் என்று பெரியார் தலைமையில் 50,000 திராவிடர்கள் முழங்கினர். மிரண்டு ஓடினர் பதவிப் பித்தர்களும் பட்டந் தாங்கிகளும். புதியஎழுச்சி. இருட்டடிப்பு பயன்படவில்லை. மூலை முடுக்குகளிலெல்லாம் திராவிடர் கழகம் பற்றி பேச்சு. முழு ஆதரவு இல்லாவிட்டாலும் பழைய அலட்சியம் இல்லை. இதற்கென்ன சொல்லுகிறீர்கள் அதெப்படிச் சரி என்று மக்கள் நம்மை மதித்துக் கேட்க ஆரம்பித்துள்ளனர். கவனம் நம்பக்கம் திரும்பியுள்ளது.

குக்கிராமங்களிலெல்லாம் கழகங்கள். வாசகசாலைகள். சீர்திருத்தநாடகங்கள்தான் வெற்றிகரமாக நடத்த முடிகிறது. இந்த விழிப்பை யாரும் அவ்வளவு சுலபமாக மறைத்துவிட முடியாது.

குறிப்பாக நான்கு ஐந்து, ஆண்டுகளிலே எவ்வளவு மாற்றம்! பழமைக்காக நின்று வாதாடுபவர்களைக் காணோம். பண்டிதர்களின் கவனம் ஸ்தல புராணங்கள், வேறு புராண காவியங்கள் இவைகளிலிருந்துதிருக்குறள் சங்க இலக்கியங்கள் இவைகள்பால் திரும்பியிருக்கிறது.

வாலிபர்கள், கல்லூரிமாணவர்கள் மற்றும் பொது மக்கள் எல்லோரும் சுயமரியாதைக் காரனுடைய எழுத்தும் பேச்சும் தான் அழகாயிருக்கிறது, நன்றாயிருக்கிறது என்று சொல்வதன் பொருள்என்ன? அவன் கூறும் கொள்கைகள் முன்போல் ஆத்திரத்தை ஊட்டுவதில்லை. சரியென்று படுகிறது. ஆனால் நடைமுறையில் ஏற்று நடத்தும் மனவலிமையில்லாததாலும், கொள்கைகள் எல்லாம் சரி என்று வெளிப்படையாகக் கூறத்தைரியமில்லாததாலும்பேச்சும் எழுத்தும் நன்றாயிருக்கிறது என்று மேலாகக் கூறிடுகின்றனர். 25ஆண்டுகட்குப் பின்னர் மக்கள் உள்ளத்தை நம்கொள்கைகள் தொட்டுள்ளன.

பழமை விரும்பிகளின் சொந்த இடமாயிருந்த இலக்கிய மன்றங்களில் எல்லாம் பகுத்தறிவு மணம் பரவியது. நாடகங்களில் எல்லாம் நம் கொள்கைகள் பரிமளிக்கத் தொடங்கி விட்டன.

நாம் பெற்றுள்ள வெற்றிகளை எண்ணி மகிழ்வோம்—ஆனால் பெற வேண்டிய வெற்றிகளைக் கவனத்திற்கொண்டு—தூத்துக்குடி தரும் ஆர்வத்தைத் துணைகொண்டு, நமது இலட்சியப்பயணத்தைத் தொடங்குவோம். வாழ்க திராவிடம்!

●

## ஜாதிமுறைக்கு சாவுமணி

7-ம் பக்கத் தொடர்ச்சி

யுமா? இந்த உறுதியை, மண்டைக்கர்வம் என்றும் மதியை நாத்திகம் என்றும் கூறி அவர்களை மடக்கி விடவோ, ஒடுக்கிவிடவோ முடியுமா!

ஒரு கையிலேதடி! மற்றொரு கையிலே தர்ப்பைக் கட்டு! கட்கத்திலே கந்தல் பஞ்சாங்கம்! கூனிய முதுகுள்ள குருக்கள், இந்தக்கோலத்துடன் உள்ளே நுழைவார், அங்கு, விம்மிக்கொண்டும், கண்ணைக்கசக்கிக் கொண்டும் பலர் இருப்பர். உயிர் ஊசலாடிக் கொண்டிருக்க, ஈளை கட்டிப் போய், ஈ எறும்பு கடிப்பதும் தெரியாமல், நோயாளி கிடக்க, அவன் மகனோ, உடன் பிறந்தவனோ உள்ளம் ஒடிந்துபோய் இருக்க, அந்த நோத்தில் உள்ளே நுழைந்த உருவம், 'என்னநோய்? மருந்து என்ன தந்தீர்கள்?' என்றும் கேளாமல் அந்தஜீவன் சரீரத்தைவிட்டுப் பிரிவதற்காகப் படுகிற சிரமத்தைப்பார்த்தாயா; அப்பா! மகாபாபம்! மகாதோஷம்! கோதானம் செய்தாலொழிய, பிராணன் நிம்மதியாகப் போகாது என்று கூறுகிறார்—சொன்னால் போதும் காரியம் நடந்தே தீரும் என்ற தைரியத்தில், ஆக வேண்டிய காரியத்தைக் கவனியுங்கள் என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

மேதாவியும் பலரகமான அரசியல் குழு அமைந்தாலும் எதிலும் ஓர் மந்திரி இடம் தேடிக்கொள்ளும் மதிவாணருமான டாக்டர் சுப்பராயன் போன்றவர்களின் மனைகளிலே இப்படிப்பட்டஅர்த்தமற்ற காட்சி ஏற்படமுடியாது—ஆனால் 100–க்கு 90-பேருக்குமேல், இந்தக் காட்சியைச் சர்வசாதாரணமானது என்று மட்டுமல்லவே' சாஸ்திரோக்தமானது என்றுதானே கருதுகிறார்கள். நாட்டிலே நடைபெறும் நிகழ்ச்சியல்லவா இது? நல்லறிவாளர்கள் இத்தகைய அர்த்தமற்ற வழக்கத்தை அறவே ஒழிக்க வேண்டுமென்றுதானே எண்ணுவர். எப்படி ஒழிப்பது? எல்லோரும், பாரிஸ்டர் படிப்பை முடித்துக்கொண்டு. மணப்பக்குவம் பெற்று, பிறகு, இக்காரியத்தைத் தாமாகப் பிறருடைய தூண்டுதல்இன்றிச் செய்யவேண்டும் என்று கன்னெஞ்சர்களும் கூறாரே. பிரிட்டனில் உள்ள ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் தர்மத்தின் இலட்சணத்தை உணர்ந்து, இந்தியாவை அடிமை நாடாக வைத்திருப்பது அதர்மம் என்பதை அறிந்து, பிறகு சுயராஜ்யம் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று, நம் நாட்டுத் தலைவர்கள் போதித்தனர். போரிட்டோமே! அதுபோலத் தானே மரண வரி வசூலிக்கும் அதிகாரி போல மடிசஞ்சிகள் மதிமயக்கம் உற்றவர்களின் மனைகளில் புகும் வழக்கத்தையும் எதிர்த்துப் போராடி ஒழிக்கவேண்டும். எதிர்த்துப் போராடுவது என்றால் என்ன பொருள்? அந்த முறையின் ஆபாசம் கேடு,! ஆகியவைகளை அம்பலப்படுத்துவதுதானே! அவ்விதம் அம்பலப்படுத்தாவிட்டால், பலகாலமாக, அந்த வழக்கத்தில் ஈடுபட்ட மக்களின் மனம் எப்படி மாறமுடியும்? அவ்விதம் அம்பலப்படுத்தும்போது, "ஆஹா பார்ப்பனத் துவேஷி! என்று அழத் தொடங்கினால், அரசாங்கத்தைத் துணைக்கு அழைத்து, "அக்ரமக்காரன் என் பஞ்சாங்கத்தையும் பரம்பரைப் பழக்கத்தையும் பழிக்கிறான். பயலைப் பிடித்துத் தள்ளுங்கோ ஜெயிலுக்குள்ளே" என்று கூறினால், நாட்டைத் திருத்தி அமைக்கும் காரியம், எப்படி நடைபெறும். இவ்வளவு தெளிவும் நியாயமும் உள்ள பிரச்னைக்கு, இந்த நாட்டு அறிஞர்கள், ஏதாவது, அதற்குரிய படியான மதிப்பு அளிக்கிறார்களா?

இந்தக் கொடிய ஜாதீயத்துக்கு சாவுமணி அடிக்க, இந்நாட்டு வாலிபர்கள், ஏன், இதற்கென, ஒன்றுகூடக்கூடாது! ஏன், ஜாதி ஒழிப்புக்கென்றோர் கிளர்ச்சி துவக்கக்கூடாது? ஏன் இந்தப் பிரச்னையில், நாட்டு மக்களின் கவனத்தைத் திருப்பவும், நாடாள்வோருக்கு அவர்தம் கடமையை வலியுறுத்தவும், தனியாக ஓர் மாநாடு கூடக் கூடாது!

✻

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[25—4—48 தொடர்ச்சி]

இளையபூபதி, இரவு 8-மணியாகுமா? என்று மீண்டுமொரு முறை கேட்டுத்தான் விடை பெற்றுக் கொண்டு போனான். "இரவு 8-மணியாகுமா?" என்று கேட்டதிலே அவனுடைய ஏக்கம் மிகத் தெளிவாகத் தெரிந்தது. பாபம் புதிய மோகம்! இளையபருவம்! எங்கும் அடிபடாத ஆசாமி!

அன்று இரவு சாஸ்திரியும் நானும் அவன் ஒரே அடியில் வீழ்ந்ததுபற்றிப்பேசிச்சிரித்தோம்.

இளையபூபதியைவிட அவனுடைய கடியாரம் அவசரப்பட்டதுபோலும். 7½-மணிக்கே, அது எட்டு என்று காட்டிவிட்டது, பூபதியும் பூஜைக்கு வந்தான். அன்று பூபதிவரும்போது சாஸ்திரி பின்கட்டில் குளித்துக் கொண்டிருந்தார். நான்தான் பூபதியை வரவேற்றேன். வாயால் ஒன்றும் சொல்லவில்லை. கண் இருக்கும் போது வாய் எதற்கு? சாஸ்திரி குளித்துவிட்டுவருவதற்குள், பூபதி என்னைப் பூஜை செய்தான். நான் பூஜை சாமான்களை எடுத்து வந்து வைத்தேன். ஒன்றிரண்டு சாமான் (தவறிக்)கீழே விழுந்தன. பூபதி நான் எடுப்பதற்குள் அவைகளை எடுத்தான், என்கையில் கொடுத்தான். அவனுடைய கடியாரத்தை விட கைவிரல்கள் மகா அவசரம்! சாமானைமட்டும் என்கையில்கொடுத்தனவா? தீண்டவும் தீண்டின. ஒரே நாள் பூஜையில் இவ்வளவு கிடைத்தது என அவனுக்குச் சந்தோஷம்.

தாங்கள் ஒரே குமாரர்தானே?

ஆமாம்! ஒரேபிள்ளைதான். பெண் கூடக் கிடையாது.

இந்தச் சுருக்கமான சம்பாஷணைக்குப்பிறகு நான் மௌனம் சாதித்தேன். வலையில் விழுந்த மீன் வறுபடாமலாபோகும்.

"இந்தப் பூஜைக்குஎன்ன பெயர்.?

"இஷ்டசித்தி விநாயகபூஜை"

மீண்டும் நான் வாயை மூடிவிட்டேன். அவன் தன் கண்களால் என் இருதயமெனும் கதவைத்தட்டினான். நான் புன்சிரிப்பு என்னும் சாளரத்தைமட்டுமே திறந்தேன். சாஸ்திரியும் வந்தார். பூஜையும் ஆரம்பமாயிற்று.

பூஜை முடிந்ததும் இரண்டுதேவாரம் பாடினேன். என்ன உருக்கம்! என்ன இனிமை! என்றுஇளையபூபதி கூறினார். திருவாசகத்துக்குருகாதார் உண்டா? என்றார் சாஸ்திரியார். "அதுவும் அம்மாவின் பாட்டு ........"என்றபூபதி துதிக்கத்தொடங்கினார். "அவளுக்குக் கொஞ்சம் சங்கீதஞானம் உண்டு" என்று சாஸ்திரி காரணங்கூறினார் "ஜெமீன்தாரவாள் கேட்காத பாட்டா? எத்தனையோ தாசிகளின்பாட்டைக் கேட்டிருப்பாரே" என்று நான் துவக்கினேன். "சேச்சே! தாசிகள் பழக்கம் அவருக்கு ஏண்டி இருக்கப்போகிறது. பரமசாது. சகலகுண சம்பன்னன் அவர்" என்று சாஸ்திரி பூஜித்தார். "அம்மா சொன்னதுபோல் நான் பாட்டுக்கேட்டிருக்கிறது உண்மைதான். ஆனால் தாசிகள் பழக்கம் கிடையாது" என்றான் பூபதி, 'யார் நம்புவா இவாளை' என்று நான் கூறினேன். இளையபூபதி இளித்தான்.

மூன்றும்நாள் நடுநிசிப் பூஜை! இரண்டுநாள் பழக்கமும் நடுநிசிநேரமும் சும்மா விடுமா பூபதியை! வரும்போதே அம்மாவைத்தான்கேட்டார்! சாஸ்திரி குளியலுக்குச் சென்றபோது, என்கூடவே கலந்துசாமான்களை எடுத்துவைத்தார். கைவிரல் பட்டது போய், உடலேமோத ஆரம்பித்துவிட்டது. உள்ளம் மோதிவிட்ட பிறகு இது சகஜந்தானே.

"அவர் வந்துடப்போறாரே" என்றேன் நான். இது எச்சரிக்கை.

"குளித்துவிட்டு வரநேரமாகும்" என்று பூபதி குழைந்து கூறினார்.

"கண்டுவிட்டால் ஆபத்து"என்று நான் பயமுறுத்தினேன். கொல்லையில் புகுந்த காளையாயிற்றே அவன், பயிரை அழிக்கப் பயப்படுவானா?

"தலை போவதானாலும் தயார்" என்றான்.

"அவ்வளவு துணிந்து விட்டீர்" என்று நான் தூண்டினேன். பூபதி என்னைத் தழுவிக்கொண்டான் பதில் கூறுவதற்குப் பதிலாக.

"இது என்ன காரியம்? அடுக்குமா?" என்று மெள்ளக்கேட்டேன்.

"என்ன காரியமா? என் உயிர் நிலைக்க இதுசெய்தே தீரவேண்டும்" என்று அவன் கொஞ்சினான். "முடியவே முடியாது" என்றான். காரியம் மிஞ்சிவிட்டது. "இதுபோல் எவ்வளவு நாழிகை என்னைக் கட்டிப் பிடித்து நிற்கப்போகிறீர்" என்றேன் நான் கேலியாக. "உலகமே எதிர்த்தாலும் சரி! உன் கணவன் என் தலையை வீசி எறிந்தாலும் சரி! ஒரு முத்தம் நீ கொடுக்கும்வரை இப்படித்தான் நிற்பேன்" என்றான். காம வெறி தலைக்கு ஏறிவிட்டது.

"கண்ணாளா, உன்மீதும் எனக்கு பிரியந்தான்; நான் அவருக்கு மூன்றாம்தாரம், இருந்தாலும் இம்மாதிரி காரியம், பாபம் இதுவரை நடந்தது போதும் விட்டுவிடு" என்று நான் தர்மோபதேசம் செய்தேன். தண்டனைக்கே பயப்படமாட்டேன் என்று சொன்னவன் தர்ம போதனைக்கா பயப்படப்போகிறான். சாஸ்திரியார் வரும் காலடிச்சத்தம் கேட்டது "விடு! விடு" என்று நான் படபடத்துக்கேட்டேன். "கொடு! கொடு!" என்று அவன் மூச்சுத்திணறத் திணறக்கேட்டான், என்ன செய்வது? "ஒரு முத்தம் ஒரே ஒருமுத்தம்"— என்றான் பூபதி! எங்கள் இதழ்கள் நெருங்கின. அவனது கண்கள் தானாக மூடிக்கொண்டன. சாஸ்திரியாரின் காலடிச் சத்தத்தை மீறிவிட்டது, நான் தந்த முத்தம்!

எடுத்த காரியம் ஜெயமாக முடிந்தால் ஏற்படும் ஆனந்தமே தனி

யானது. கதிர் முற்றியதும் உழுதவன் முகம் ஜொலிக்கிறது. அரும்பு மலர்ந்ததும் மணம் வீசுகிறது. செங்காய் கனியானதும் நாக்கில் ஜலம் ஊறுகிறது. இதுபோல்தான் எனக்கு ஆனந்தம். இளையபூபதி கேட்ட ஒரு முத்தம், எனது வாழ்க்கையிலேயே ஓர் முதல் வெற்றி! அவன் தவித்த தவிப்பும், கெஞ்சியதும் கொஞ்சியதும், என்னைப் போற்றியதும், புகழ்ந்ததும், சத்தியங்களைச் சரமாரியாகக் கொட்டியதும், எவ்வளவு என்று எண்ணுகிறீர்கள். இப்போதாவது நான் இத்தவிதமான உலகிலே உழன்று தெளிவு பெற்றிருக்கிறேன். அந்தக் காலம் எனது ஆரம்பப்பருவம். அப்போது சமாளித்து, சாகசமாகவே நடந்துகொண்டேனே, அதுதான் அதிசயம். என்னதான் தாசியாக இருந்தாலும், அவன் செய்த "பூஜை" உள்ளபடி என்மனதில் சற்றுச் சபலம் தட்டத்தான் செய்தது. எவ்வளவு கள்ளங்கபடற்றவன்! வெள்ளை மனது! சொன்னதை நம்புகிறான். என்னை அசல்சாஸ்திரியின் சம்சாரமென்றே நம்பினான். பூஜை விஷயமும் உண்மை என்றே எண்ணினான். துள்ளி விளையாடும் மான் மறைந்திருந்து எறிந்த வேலுக்கு இரையானதுபோல், இளையபூபதி என் சாகசமென்னும் சாஸ்திரப் பிரயோகத்தால் சாய்ந்தான். சாய்ந்தவன் சகல உண்மைகளையும் எப்படியும் ஓர்நாள்தெரிந்துகொண்டுதானே தீருவான். அப்போது அவனுக்கெவ்வளவு கோபம் வரும், மனம் எப்படிக் கொதிக்கும், என்னைச் சித்திரவதை செய்யலாம் என்று கூடத் தோன்றுமல்லவா! இதனை நான் நினைத்தபோது சற்று நடுக்கமாகத்தான் இருந்தது. ஒரு ஜமீன்தாரின் விரோதத்தைப் போக்க எண்ணிக் கடைசியில் இரண்டு ஜமீன்தாரர்களின் விரோதம் வந்து சேர்ந்தால் என்ன செய்வது என்ற திகிலும் பிறந்தது. இவ்வளவு எண்ணங்களும் மனதிலே தோன்றி முகத்திலே வெற்றி, கவலை இரண்டும் தெரியும் விதத்திலே குறிகள் தோன்றின. அவன் பாபம் நான் சாஸ்திரிக்குப் பயந்தே கவலைப்படுகிறேன் என்று கருதி, "எதற்கும் நான் இருக்கிறேன் பயப்படாதே" என்று தைரியங் கூறினான். எனக்குப் பலியானவன் என்னைக் கவலைப்படவேண்டாமென்று கூறியபோது, பரிதாபமாகத்தான் இருந்தது. விளக்கு நோக்கி விட்டில் பூச்சி நெருங்கி வந்துவிட்டது.

புலிக்கு இரத்தருசி கிடைத்ததும், மேலும் இரத்தம் குடிக்கவே அலையும் என்பார்கள். மிருகத்தின் வெறிக்கும் காமாந்தகாரத்துக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது. எனது முதல் முத்தம் இளையபூபதி எனும் புலிக்கு முதல் இரத்தருசி. மேலும் மேலும் அதைப்பருக அவன் பதைத்தான். சாஸ்திரி அடுத்த நிமிடம் அங்குவந்து பூஜையைத் துவக்கியதால் என் அதரம் தப்பிற்று. அன்றைய பூஜையும் முடிந்து மறுதினமும் பூஜை நடந்தது. மறுதினம் முதற்கொண்டு இளையபூபதி பூஜா விடுதியிலேயே தங்கவேண்டுமென்ற ஏற்பாட்டின்படியே தங்கினார். அந்த ஏற்பாடு இல்லாதுபோனால் பூபதியின் இருதயமே இருகூறாகிப் போயிருக்கும். சாஸ்திரிகள் மௌனவிரதம் பூண்டார். பூஜை சதாகாலமும், எங்கள் சல்லாபமோ சமயம் நேரிட்டபோதெல்லாம் நடந்தது. ஆண்களை ஆசை பிடித்து ஆட்டத் தொடங்கினால் அவர்கள் எதுவும் செய்யத் தயார்தானே. வீரம், சூரத்தனம், விறுவிறுப்பு எல்லாம் மாயமாகத் தானே போய்விடும். இளையபூபதி என் கண் ஜாடையையே கட்டளையாகக் கொண்டு ஆடி நின்றான். அந்தச் சமயத்தில் நான் எதைக்கேட்டாலும் கொடுக்கச்சித்தமாக இருந்தான். நான் எதைச் செய்யச்சொன்னாலும் சம்மதம் என்பான். என்னால் அவனுக்கும் அவன் தகப்பனருக்கும் சண்டை மூட்டிவிட முடியும்! அவனுடைய வீட்டிலேயே அவன் கள்ளனாகி, பணமும் நகையும் எடுத்து வரவேண்டுமென்றால் ஏவமுடியும். கணபதி சாஸ்திரியின் கழுத்தைத் திருகிப் போடும்படி செய்யமுடியும்! கதைகளிலே சொல்வார்களே, புலிப்பால் கொண்டுவா என்றால் கூடக் கொண்டு வருவான் என்று, அந்த நிலைமையில் இருந்தான் ஆசாமி. எல்லாம் எதற்கு? பெரிய யானையை அடக்க சிறிய அங்குசம் உதவுவதுபோல், ஆண்களின் அட்டகாசத்தை அடக்க பெண்களின் சாகசம் உதவுகிறது!

"இஷ்டசித்தி விநாயகர் இனி எனக்கு வேறு என்ன பிரசாதம் தரவேண்டும். உன்னை எனக்குத் தந்த பிறகு இனி வேறு எதைக் கொடுக்கவேண்டும்?"

"நான் கணபதி சாஸ்திரிகளின் மனைவி, அவர் இஷ்டசித்திவிநாயகர் கோயில் குருக்கள். கவனமிருக்கட்டும்!"

"ஆமாம்! நீ சாஸ்திரியின் மனைவிதான். ஆனால் என் காதலி, இது இஷ்டசித்தியார் தந்த வரப்பிரசாதம்."

"இன்னும் இரண்டு தினங்கள் தானே இந்த இன்பம்."

"அப்படியென்று நீயும் எண்ணியிருந்திருப்பாய், சாஸ்திரியாரும் கருதியிருப்பார். ஆனால் நான் இதை என் நிரந்தர இன்பமாக்க நெஞ்சில் உறுதிகொண்டு விட்டேன்"

"அது உமது எண்ணம்! காரியம், கருத்தின்படியேதானா நடக்கும்? நாமொன்று நினைத்தால் நடப்பது வேறொன்றாக முடியும்.

"அப்படியென்றுசாஸ்திரியும்என் அப்பாவும், எனக்கு மாமனாராகலாம் என்று மனோராஜ்யம் செய்து வரும் ஜெமீன்தாரரும் இரண்டொரு நாட்களிலே பேசிக்கொள்வார்கள்."

"என்ன? என்ன? எனக்குவிளங்கவில்லையே. பூஜை முடிந்ததும் நாங்கள் ஊருக்குப்போகத்தானே போகிறோம்."

"ஆமாம்! ஆனால் பூஜைதான் முடியப் போவதில்லையே!"

"விஷயத்தைச்சொல்லுங்கள். நீர் பேசுவதே அதிசயமாக இருக்கிறது. பயமாகக்கூட இருக்கிறது.'

"பயப்படாதே ஆனந்தம். இன்றிரவு நாமிருவரும் இங்கிருந்து கிளம்பி, இந்த ஊரை விட்டே ஓடிவிட நான் ஏற்பாடு செய்துவிட்டேன். நமது ஆசைக்குக் குறுக்கே நிற்கும் சாஸ்திரி, என் அப்பா, முதலிய எதுவும் நம்மைத் தீண்டாத தேசம் சென்றுவிட வேண்டும்."

"ஐயயோ நான் மாட்டேன். ஊர் நிந்தனைக்குஆளாகமாட்டேன்."

"அது உன் முடிவானால் என் பிணத்துக்கு நீ உன் கண்ணீரால் அபிஷேகம் செய்ய நேரிடும்."

"ஐயயோ இது என்ன தர்ம சங்கடம்?"

இந்தச்சம்பாஷணை நான் இளையபூபதியுடன் அன்றிரவே ஓடிவிடுவது என்ற விதத்தில் தான் முடிந்தது. அதுதான் நடந்தது. ஜெமீன் குடும்பங்கள் இரண்டும் தத்தளித்தன, தவித்தன. கணபதி சாஸ்திரி தமது குட்டு வெளியாகாதிருக்க, காசி

சென்றுவிட்டதாகக் கேள்வி. நாங்கள் ஓடிவிடப்போவதாகச்சாஸ்திரிக்கும் நான் சொல்லவில்லை. சாஸ்திரியிடம் நான் சொல்லி வைத்தது, பூஜைஎன்றசாக்கில் இளைய பூபதியை வீட்டிற்கு வரப்போகச் செய்து வசியப்படுத்தி, மணமாக இருந்த பெண்ணின் மீது ஏதாவது தோஷங் கூறிக் கல்யாணத்தை நடக்கவொட்டாது தடுத்துவிடுவது என்ற முறையில்தான் சொன்னேன். இளைய பூபதியைக் காணும் வரை அந்த விதமாகத் தான் செய்யவேண்டுமென்று நானும் எண்ணியிருந்தேன். ஆனால் பூபதி கூறிய யோசனை ஜெமீன்தார் மீது வஞ்சந் தீர்த்துக்கொள்ள இன்னும் அதிகமாக உதவும் எனத் தெரிந்ததும், சாஸ்திரிக்கும் சொல்லாமல் நாங்கள் கிளம்பிவிட்டோம். குற்றாலம் போய்ச் சேர்ந்தோம். போகும் வழியில் நான் சாஸ்திரியின் மனைவி அல்ல என்பதையும், தாசி என்பதையும் சாஸ்திரி என்னைத்தன் மனைவி போல் நடித்தால், ஜெமீன் வீட்டில் பூஜை செய்து பெரும் பொருள் பெற்றுப்பணம் தருவதாகக் கூறியே அழைத்துவந்ததாகவும் கூறினேன். இளைய பூபதிக்கு இச்சேதி கோபத்தையும் வருத்தத்தையும் கொடுத்தது. ஆனால் என் கண்ணீரும் பெருமூச்சும், சோகப் பார்வையும், அவனது கோபத்தை மாற்றிவிட்டன. நாங்கள் குற்றாலத்தில் குஷாலாகவே வாழ்ந்து வந்தோம். நான் தாசி. என்னை இதற்காக யார் என்ன கண்டிக்க முடியும்? அவரோ மேஜர். யார் அவரைத் தடுக்க முடியும்? இருவருக்கும் இதோபதேசம் செய்வார்கள்! ஆனால் இதே குற்றம் செய்திராவிட்டாலும் வேறு ஏதாவது குற்றம் செய்த பேர்வழிகளாகவே, உபதேசம் செய்ய வருபவர்களிலே அனேகமாக இருப்பார்கள். அந்த கையோர் உபதேசம் எமக்கு ஏன்? நாங்கள் இளம் பருவத்தினர். என்னிடம் அழகு. ஜெமீன்தார் மகனிடம் பணம். என் அழகை அவருடைய பணத்துக்கு அடகு வைத்தேன்! நான் வைக்காவிட்டால், வேறு எவரேனும் அடகுவைக்கத் தயார்தானே! நானும் இவரிடம் அடகு வைக்காவிட்டால், வேறு வியாபாரியிடம் ஈடாக வைத்திருப்பேன். இந்த முறை மாறினால்தானே இளையபூபதி போன்றவர்கள் சீர்பட முடியும். இல்லையானால் இந்த விமலா இல்லாவிட்டால் வேறு ஒருவள் கிடைக்கிறாள். நாற்றம்போக மருந்திட்டுக்கழுவாத நாசிக்கு "நீ அந்தக் கெட்ட வாடையை நுகராதே உடலுக்குக் கெடு" என்று உபதேசம் செய்தால் நடக்குமா?

இளையபூபதிக்கு வீட்டிலிருந்து, முதலில் இதோபதேசம் செய்வதும், பிறகு மிரட்டியும், பிறகு சபித்தும் கடிதங்கள் வந்தன. இதோபதேசக் கடிதத்திற்கு, "இது விதிவசம். விலக்க முடியாது" என்று பதிலும், மிரட்டல் கடிதத்துக்கு "இது சகஜம், உலகத்திலே நடப்பதுதான்" என்று விளக்கமான பதிலும், சபித்து எழுதிய கடிதத்துக்குப் பாகப் பிரிவினைக்கு வழக்கிடஉத்தேசமென்ற வக்கீல் நோட்டீசும் பதிலாகக் கிடைத்தன. இடையிலே இளைய பூபதி நாலைந்து கடன் பத்திரங்களில் கையொப்பமிட்டார். நான் இரண்டு மூன்று முறை வீட்டுக்கு மணியார்டர்கள் அனுப்பினேன்.

குற்றாலத்தில், எங்களுக்கு வாழ்க்கை நன்றாகவே இருந்தது. நான்கூட முதலிலே கொஞ்சம் பயந்தேன், ஊரார் என்ன சொல்வார்களோ என்று. ஆனால் ஜெமீன்தார் வீட்டு மகன் அட்டைக்கருப்பாக இருந்தாலும் மாநிறம் என்று சொல்வதுபோல, சீமான் வீட்டுப் பிள்ளை சுத்தபைத்யமாக இருந்தாலும், 'சில வேளைகளில் புத்தி சுவாதீனமாக இருப்பதில்லையாம். வேதாந்த சாஸ்திரங்களைப் படித்தால் கொஞ்சம் கலக்கமாம் என்று சொல்வதுபோல, சில நாட்கள் சென்றதும், ஏதோ பாலியம், கண்ணுக்குப் பிடித்தமானவளோடு தமாஷாகக் காலங்கழிக்கிறார். இது ஒரு பெரிய தவறா? அவர் சந்யாசியா? அந்தஅம்மாள்தான் என்ன யோகியா? இது சகஜமாக நடப்பதுதானே" என்று பலரும் கூறத்தொடங்கினார்கள்.

- நாலு வேதத்தையும் கரைத்துக் குடித்தவர் என்று பெயர் வாங்கியவரும், கோயிலுக்குள் ஆதித்திராவிடர் சென்றால் எப்படித் தீட்டு வரும் என்பதற்கு எண்ணாயிரம் சாஸ்திர ஆதாரம் காட்டக்கூடிய வருமான பஞ்சாமிருதப் பிரசங்க பாபவிமோசன சாஸ்திரிகள், குற்றாலத்து நீர்வீழ்ச்சிக்கும் காதல் உள்ளத்திற்கும் உவமை வைத்துப் பேசுவார் எங்கள் எதிரில். "எங்ஙனம் கரடுமுரடான கற்பாறைகளில் நீர் ஓடியபோதிலும் அது குளிர்ந்தும், தெளிந்தும் இருக்கிறதோ, அதுபோல்விமலா ஒருதாசியாக இருந்தபோதிலும்,தாங்கள் அவளிடம் கொண்டிருக்கும் காதல் பரிசுத்தமானது. இது பாபக்கிருத்தியமாகாது. விசுவாமித்திர மகாமுனிவர்கூட மேனகையைத் தள்ளிவிடவில்லை. மேலும் ஆண்டவனே அன்பு சொரூபம்." — என்று தமது மதத்தையே எங்கள் பக்கம் சாட்சிசொல்லும்படி செய்தார். அவர் மட்டுந்தானா? நாங்கள் அடிக்கடி குற்றாலத்திலே நடத்திய விருந்துகளுக்கும் கேளிக்கைகளுக்கும் விஜயம்செய்த கனதனவான்கள் அவரவர்களுக்குத் தெரிந்த அறிவை எமக்குச் சாதகமாகவே சாட்சி கூறச்செய்தனர். தாசி வீடுகளுக்குப்போய் ரோகங்களைச் சம்பாதித்துக்கொள்ளாதேஎன்பதைப்பற்றிய ஆராய்ச்சி நூல் எழுதியவராம் ஒரு டாக்டர், அவர் கூறினார் ஒருநாள் "மனதிலே எழும் இச்சையை அடக்கினால், அதனால்மனம் நொந்து, உடல் வாடி, பிறகு க்ஷயரோகம் வந்துவிடும். ஆகவேஜெமீன்தாரர் தமது மனதுக்குப் பிடித்த மாதை அடைந்தது மகாசரியான காரியம்" என்று. இதுபோல், ஒவ்வொருவரும் ஒவ்வோர் விதமாகப் பேசுவர். அவர்கள் பெற்றபரிசு என் தரிசனம்,ஜெமீன்தாரரின் தோழமை. அதனால் பண இலாபம், இவைகள் தான். ஒரே ஒரு ஆசாமிதான்,இவர்கள் பேசியமாதிரி எல்லாம் பேசவில்லை. எங்கள்வாழ்க்கையைப்பற்றி ஆச்சரியப்படவுமில்லை. அதுசரி என்பதற்கு ஆதாரம் காட்டவுமில்லை. ஒரு யோசனைமட்டும் சொன்னார். "ஜெமீன்தாரர், இந்த அம்மாளுடன் கூடி வாழ்ந்தால், வாழ்க்கை இன்பமாக இருக்குமெனக் கருதினால், உலகமறிய ரிஜிஸ்டர் கலியாணம் செய்து கொள்ளட்டுமே" என்றார். மற்றவர்கள்போல் மலை மலையாக ஆதாரங்களைக் குவிக்கவில்லை. மிகச் சாதாரணமாகக் கூறினார். அது கேட்டு என்மனம் மகிழ்ந்தது. நான் மூத்தவளை மணம் செய்துகொள்ள எண்ணிய காலமும், அதனால் வந்த வம்புகளும் என் நினைவிற்குவந்ததும் மனமகிழ்ச்சி மறுகணமே போய்விட்டது. ஜெமீன்தாரரின் சிரிப்பும் அந்த யோசனையைக் கேட்டதும் மறைந்துவிட்டது. அந்த ஆசாமி போனபிறகு, ஜெமீன்தார் சொன்னார், "இந்த ஆள், சாமியில்லை, பூதமில்லை என்று பேசுகிற சுயமரியாதைக்காரர்" என்று. சாமி பூதத்தைப்பற்றி அவர் ஒன்றும் பேசவில்லை. இருக்கிறதா இல்லையா என்ற விஷயமே பேசவில்லை. அவர் கூறிய

திலே அறிவு இருந்தது! அதுபிடிக்க வில்லை ஜெமீன்தாருக்கு. அவருக்கு மட்டுமா? உலகத்திலே பலருக்கு, முக்கால்வாசிப் பேருக்குப் பிடிக்கத் தான் மாட்டேன் என்கிறது.

(தொடரும்)

### யாழ்வல்ல பாணரை

4-ம் பக்கத் தொடர்ச்சி

தில் தான் கூப்பிடவேண்டும். கூப்பிடுவதும் யார்வேண்டுமானாலும் கூப்பிடலாம் என்ற ஏற்பாடு கூடக் கிடையாது. தமிழ்மக்கள்எவராவது சமஸ்கிருதத்தைப் படித்து, அந்த மொழியில் அவரைக் கூப்பிட்டால், "ஓ, நீ தமிழனா? சமஸ்கிருதத்தை உச்சரிக்கலாமா?" என்று கூறி ஏறெடுத்துக்கூடப் பார்க்கமாட்டார். அவ்வளவு பகைமையுணர்ச்சி தமிழர்களிடத்தில் அவருக்கு அன்று தொட்டு இன்றுவரை இருந்துவருகிறது.

எனவேதான், ஒரு தமிழனை பாணபத்திரன், அதிலும் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த பாணபத்திரன், தம்முடைய ஊரில் இருந்து வந்த ஏமநாதனுடன் யாழ் வாசித்து வெல்லுவதை ஒரு கேவலமாக எண்ணியே சிவன் அந்தப்பணியை அவரே மேற்கொண்டு, ஏமநாதனை அவரே வென்றார் என்று, "குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படு" என்றபழமொழிக்கேற்ப, ஏமநாதனை வென்றவர் சிவனேயன்றிப் பாணபத்திரர் அல்ல என்று பொருள் கொள்ளும் முறையில் கதையைத் தீட்டிவைத்துவிட்டனர். என்று இது காறும் எழுதப்பட்ட விளக்கம், கதையின்போக்கை ஒட்டி எழுதப்பட்ட கருத்தாகும். இனி இந்நிகழ்ச்சியால் பெறப்படும் உண்மையை ஆராய்வோம்.

வடநாட்டிலிருந்த ஏமநாதனென்பவன், தமிழ் நாட்டிலிருந்த பாணபத்திரரைப் பற்றியும் அவருடைய இசைத் திறமையைப் பற்றியும் கேள்விப் பட்டிருப்பான். எனவே, தன்னுடைய இசைத்திறமையினால் பாணபத்திரரை வென்றுவிடலாம் என்று கருதி வந்திருப்பான். வந்த இடத்தில், பாணபத்திரரின் மாணாக்கர்களைக் காண நேர்ந்திருக்கும். இது இயல்பு தானே. தொலைவில் இருக்கும் ஒருவர் தம்மையொத்த ஒருவர் இன்ன இடத்தில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்கவோ அன்றி அவருடன் உரையாடல் நடத்தி அவருக்கும் தமக்குமுள்ள திறமையை அளந்து பார்க்கவோ அவர் இருக்கும் ஊருக்கேவருவதும், வந்தாலும், வந்ததும் தாம் குறிப்பிட்ட ஆளை உடனே போய்ப்பார்க்காமல், அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் அவரைப் பற்றி விசாரிப்பதும், அந்த விசாரணையினால் பெறப்படும் தெளிவு, தாம் குறிப்பிட்டு வந்த ஆளைப் பார்க்கவும், பார்க்காமலேயே திரும்பிப் போகவுமான நிலைமையை உண்டாக்குவதும் இயல்பு.

இதற்கு ஓர் காட்டு:— நா. கதிரைவேற் பிள்ளை என்ற தமிழ்ப் புலவர், ஒருசமயம் தம்

(2-ம் பக்கம் பார்க்க)

படித்தீர்களா?
ஆரியதிராவிட போராட்டசித்திரம்
"இராவணன்"
விலை ரூ. 1—12—0
விற்பனையாளருக்கு 20% கழிவு தரப்படும்.
கிடைக்குமிடம்:—
செந்தமிழ்ப் பாசறை,
கரந்தை, தஞ்சாவூர்.

தூத்துக்குடியில்

# திராவிடர் கழக 18-வது
## மாகாண மாநாடு

வ. உ. சி. மைதானத்தில் அமைக்கப்படும்
அர்ச்சுனன் பந்தலில்
மே, 8, 9, சனி ஞாயிறுகளில்
திராவிடத் தந்தை பெரியார்
ஈ. வே. ரா. அவர்கள்
தலைமையில் நடைபெறும்

திறப்பாளர்: தோழர் டி. பி. வேதாசலம்
கொடி யேற்றல்: தோழர் கே. கே. நீலமேகம்

திராவிடநாடு, நாகப்பையார், ஏ. டி. பி. செல்வம், தாலமுத்து, நடராசன் ஆகியோர் படங்களை முறையே தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, இந்திராணி பாலசுப்ரமணியம், கே. வி. அழகிரிசாமி, ஏ. பி. சனார்த்தனம் ஆகியோர் திறந்துவைப்பார்கள்.

வ. உ. சிதம்பரனார் படத்தைத் திறந்துவைக்கும்படி திரு. வி. க. அவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

சீர்திருத்த நாடகத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

வரவேற்புத் தலைவர்கள்:-
ஈ. வி. ஏ. வள்ளிமுத்து, எஸ். நீதிமாணிக்கம்
செயலாளர். கே. வி. கே. சாமி
பொருளாளர். வி. வி. தனுஷ்கோடி.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.